1391

ை 10.] 1931ளு பிப்ரவரீ 1௳ [பகுதி 1

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

11 MAR 1931

“ஆனந்தபோதினி”

ஓர் இனிய மாஸாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஸு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபா தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 4-பாகமும் ...	8	4	தினகரசுந்தரி	1	0
பவளத்தீவு 2-பாகமும்...	3	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	ரத்தினபாய் ...	1	12
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2 பாகம்...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
இராஜாமணி ...	2	0	கமலசேகரன் ...	1	12
ஆனந்தலிங் ...	2	0	பூங்கோதை ...	0	10
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஞானசெல்வாம்பாள்			அமராவதி 2 பாகமும்	4	0
			மதனம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
6. லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.

11 MAR 19
186554
600 008

இளவரசர் அவ்வறையில் நுழைந்ததும் அங்கு படுக்கையில் படுத்திருந்த மாது யாரென உடனே கண்டுபிடிக்க அவரால் முடியவில்லை. அவ்வறை மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மெழுகுவர்த்தி விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அப்படுக்கையின் முன் திரையொன்று கட்டப்பட்டிருந்தது. அவர் அத்திரையை நீக்கிப் பார்த்ததும் மாரப்பன் மனைவி படுத்திருப்பதை மிக ஆவலுடன் பார்த்தார். தான் இன்னாரென்று தெரிந்தால் அவள் கூச்சலிடுவாளோ என்னும் சந்தேகம் அவருக்கு அதிகரித்துவிட்டது. ஆனால் அம்மாது தன் கண்களை மூடிக்கொண்டிருந்தாள். உண்மையில் அவள் தூங்குவதுபோல் பாசாங்கு செய்தாள். மேலும் அவள் மதனவல்லியின் யோசனைக்கிணங்க அங்குவரும் ஆடவனின் மனதைக் கிரகிக்கும் பொருட்டு சில அங்கங்கள் உபாயமாகத் தெரியும்படி படுத்திருந்தாள். அவள் உண்மையிலேயே தன் கணவனாகிய மாரப்பனே உள்ளே வந்திருக்கிறானென நினைத்தாள். ஆதலின் அவன், தான் எதிர்பார்க்கும் மதனவல்லி அங்கு இல்லாததை அறிந்தால் எவ்விதமாக நடந்து கொள்கிறானென்பதையும், அங்கு படுத்திருப்பது தன் மனைவி என்று தெரிந்ததும் தன்னிடம் அவனுக்கு எத்தகைய ஆவல் ஏற்படுகிறதென்பதையும் கவனிப்பதற்காக அவள் நன்றாகக் கண்ணை மூடிக்கொண்டு தூங்குபவள்போல் இருந்தாள்.

ஆனால் அவள் அங்கு ஏன்வந்தாள்? யாரை எதிர்பார்க்கிறாள் என்பது போன்ற விஷயங்களை அறியானாதலால்

அவள் உண்மையிலேயே தூங்குகிறுள் என இளவரசர் நினைத்தார். அவள் அங்கங்களையெல்லாம் உற்றுப் பார்த்ததும் அவருக்கு அடக்கமுடியாத காமவிகாரம் தோன்றி விட்டது. புதிய மாதர்கள் தன்னிடம் அகப்பட்டுக்கொண்டார்கள் என்று நினைக்கும்போதெல்லாம் பிற மனைவியருடன் இன்பம் அனுபவிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயுள்ள அந்த இளவரசருக்கு இத்தகைய ஒருவகையான உணர்ச்சி தோன்றுவது இயல்பே. ஆகவே இச்சந்தர்ப்பத்திலேயே அம்மாதின் இன்பத்தை நுகரவேண்டுமென்னும் ஆவல் அதிகரித்துவிட்டபடியால், அவள் தன்னை இன்னுனென்று முதலில் அறிந்துகொள்ளாம லிருக்கும்பொருட்டு மேஜை யருகில் சென்று விளக்கை அணைத்துவிட்டான். முதல் விளக்கை யணைத்ததும் மாரப்பன் மனைவி தன் கண்ணைத் திறந்து பார்த்தாளென்ருலும் அங்கு வந்திருக்கும் ஆள் யாரென்று தெரிந்துகொள்ளு முன்னரே இரண்டாவது விளக்கும் அணைக்கப்பட்டுவிட்டது. இதனுல் அவ்வறை முழுதும் இருட்டாய்விட்டதால் அங்கு ஒரு ஆண் உருவம் நிற்பது தெரிந்ததே யொழிய அது யார் என அவளுக்குத் தெரியவில்லை.

ஆகவே அவள் அப்போதுதான் விழித்துக் கொள்பவள் போல் பாசாங்கு செய்து, “நாதா! நாம் இப்போது மீண்டும் சந்திக்க நேரிட்டது. ஆனுல் என்னை இங்கே காணமுடியுமென்று நீ சிறிதும் நினைத்திருக்கமாட்டாய். ஆ! நீ இப் படுக்கையில், நீ எதிர்பார்த்தபடி ரூபலாவண்யத்திற் சிறந்த மதனவல்லியைக் காணுமல் என்னைக்கண்டதும் ஆச்சர்யப் பட்டிருப்பாய். நான் உன் மனைவி அல்லவா? எனினும் இப்போது நீ என்னை முழுதும் வெறுத்து உன் விரோதி எனவும் நினைத்துக்கொண் டிருக்கிருய். ஆனுல் நீ என்

அவ்வளவு விரைவாக அந்த விளக்குகளை அணைத்துவிட்டாய்? என்னை வெளிச்சத்தில் காணவும் உனக்குப் பிடிக்கவில்லையா? அல்லது நீ செய்த காரியங்களுக்காக நீயே அவமான மடைந்து என்முகத்தைப்பார்க்க வெட்க மடைகிருயா? அப்படித்தான் இருக்குமென்று நான் உண்மையில் நம்புகிறேன். அப்படியானல், உன் துர்க்குணங்களெல்லாம் உன்னை விட்டு நீங்கிவிட்டதென நம்பலாமா? அப்படியானல் நான் இவ்வளவு பேசும்போது நீ ஏன் பதில் சொல்லாமல் மௌனமாய் இருக்கிருய். ஆ! எதிர்பாராமல் என்னை இங்கே சந்தித்து விட்டதற்காக நீ திடுக்கிட்டுப் போயிருக்கிருய் என்று நன்ருகத் தெரிகிறது; அல்லது நீ மௌனமாக நான் சொல்வதையெல்லாம் வெறுப்புடன் கேட்டுக்கொண்டிருக்கிருயா? இப்போது நான் செல்வத்தைப்பற்றியும், சௌக்கியத்தைப்பற்றியும் சில விஷயங்கள் கூறினல் நீ அப்போது கவனத்துடனும் திருப்தியுடனும் என் பேச்சுகளைக் கேட்பாயல்லவா'' என்று கூறிக்கொண்டிருந்தாள்.

நேயர்காள்! மாரப்பனின் மனைவி பேச ஆரம்பித்த போதே ''நாதா'' என்று கூறிய மாத்திரத்தில் இளவரசர் எவ்வாறு திடுக்கிட்டுப் போயிருப்பார் என்பதை இங்கு வருணிப்பதைவிட நீங்களே அதிகமாக யூகித்துக்கொள்ளலாம். அவள் தன் கணவனைத்தான் அங்கு எதிர்பார்த்தாள் என்பதை இளவரசர் அறிந்தார். சிறிதுநேரம் என்ன செய்வதென்று இளவரசருக்கு ஒன்றும் தோன்றவில்லை. திரும்பி வெளியில் போய்விடலாமா என்றும் நினைத்தார். ஆனல் கபூர் கிருஷ்ணன் கதவை வெளியில் பூட்டிவிட்டதையும் அவர் அறிந்திருக்கிருர். ஆதலின் அந்த நிலைமையில் ஏதேனும் செய்து ஆகவேண்டும் என்று கருதினர். திரும்பி வெளியில்போக முடியவில்லை. அம்மாதோ மேலே கூறியது

போல் எதை எதையோ பேசிக்கொண்டே யிருக்கிறாள். இளவரசருக்கு திக்பிரமை அதிகமாய்விட்டது. விளக்கை ஏன் அணைத்துவிட்டாய் எனக் கேட்கிறாள். அவர் என்ன பதில் சொல்வது? மீண்டும் அவள் ஏன் பேசவில்லை என்று கேட்கிறாள். அவர் என்னபேசுவது பாவம்! அவருடைய நிலைமை மிக மோசமாய்ப் போய்க்கொண்டே யிருந்தது. அவர் தான் இன்னாரென அறிவித்துவிட்டால் அவள் அம்மாளிகை முழுதும் அதிரும்படி கூச்சலிட்டால் என்ன செய்வதென்னும் அச்சம் ஒருபக்கம் அவரை வாட்டுகின்றது. எனினும் இளவரசரின் தயவு கிடைக்கிறதென்று தெரிந்தால் அவள் இணங்கிவிடுவாள் எனக் கபூர் கிருஷ்ணன் கூறியது திடீரென ஞாபகத்துக்கு வந்தது. ஆகவே அவர் எப்படியாவது இந்நிலைமையை ஒருவாறு சமாளித்துவிட வேண்டுமென நினைத்து அவள் படுத்திருந்த படுக்கைக்குச் சென்று அவள் பக்கத்தில் உட்கார்ந்து அவளது கரத்தை எடுத்துத் தன் உதட்டின் மீது வைத்தழுத்தி ஒரு வார்த்தையும் பேசாமல் முத்தமிட்டார். அவர் அவ்வாறு முத்தமிட்டபோது அவள் கீழ்வருமாறு பேசினாள்:—

"ஆ! நான் மிகவும் சந்தோஷ மடைகின்றேன். நீ என் மீது கோபித்துக்கொள்ளவில்லை யென்றும் என்னை வெறுத்துவிடவில்லை யென்றும் தெரிகிறது. எனினும் நீ தயவுசெய்து என் படுக்கையினருகில் உட்கார்ந்து என்னுடன் விவரமாகப் பேசு. அதிருக்கட்டும்; நீ உன் மீசையை எடுத்துவிட்டாய் என்று கேள்விப்பட்டேனே. உன் கரங்களும் முன்போல் மிருதுவாயிராமல் இவ்வளவு கடினமாக இருப்பதன் காரணமென்ன? நீ எவ்வளவு கஷ்டமான வாழ்க்கையை யெல்லாம் அனுபவித்தாயோ? உன் கையைக்கொடு பார்ப்போம். என் கையை இழுத்துக்கொண்டுவிட்டாய்?"

தான் இன்னுனென்று அறிவித்துவிடக்கூடிய காலம் இன்னும் வரவில்லையென உணர்ந்த இளவரசர் ஒன்றும் பேசாமல் அவளது கன்னத்தில் இரண்டு மூன்றுதடவை தட்டிக் கொடுத்துவிட்டு அப்படுக்கைக் கருகிலிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார்.

அப்போது அம்மாது மீண்டும், "எனது அன்புள்ள நாதா! நான் சில யோசனைகளை உன்னிடம் கூறலாமென்று இருக்கிறேன். அதை நீ ஏற்றுக்கொள்வாய் என்றே நம்பு கிறேன். அதாவது நமக்குள் அந்தரங்கக் காதல் இல்லா விட்டாலும் உலகத்தார் பார்வைக்காவது நாம் கணவன் மனைவியைப்போல் வசிக்கலாகாதா? பணத்துக்கு என்னசெய் கிருய்? என்று கேட்கலாம். ஆனுல் இப்போது பணக்காரி யாக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். என்னிடம் என் தந்தையார் கொடுத்த ஐயாயிரம் பவுன்கள் இருக்கின்றன. நான் அதை இப்போது வைத் துக்கொண் டிருக்கிறேன். உனக்கும் காண்பித்து ருஜுப் படுத்தி யிருப்பேன். இதற்குள் நீ விளக்கை அணைத்து விட்டாய். ஏன் அணைத்தாயென்று அறிய முடியவில்லை" என்று பேசலானுள்.

இதற்கிடையில் இளவரசருக்கு ஆத்திரம் பொறுக்க முடியாமல் காமவிகார உணர்ச்சி அதிகப்பட்டுவிட்டது. அவர் அவ்வறையில் நுழையும்போது விளக்கு வெளிச்சத் தில் அவள் உருவத்தைப் பார்த்துவிட்டிருந்தபடியால் அந்த ஞாபகம் அதிகரிக்கவே உடனே அவளைத் தழுவிக்கொள்ள வேண்டுமென்னும் ஆவல் அதிகரித்தது. ஆதலின் அவர் சிறிது துணிந்து அவளது காத்தைப்பிடித்துத் தன் உதட் டின்மீது வைத்து அழுத்தியதுடன் அவள் கன்னத்திலும் முத்தமிட்டார். அப்போது அவர் தன் கழுத்தில் அணிந்

திருந்த நட்சத்திரம் போன்ற ஆபரணம் அம்மாதின் ஸ்தனத்தில் குத்தியதால் அவள் உயிரேபோகும்படி அவ்வளவு நோயைப்பெற்ருள். ஆகவே அவளும் தன் தேகத்தில்பட்ட அதை உடனே பிடித்ததில் அது ஒரு நட்சத்திரம்போன்ற ஆபரணம் என்று அறியவே திகிலடைந்து "யார் அது? யார் அது?" என்று மிரண்டவள்போல் இருமுறை பயங்காத்தொனியுடன் கேட்டாள்.

அப்போது இளவரசரும் தான் இன்னுரென்று தெரியப்படுத்த அதுவே சமயமெனக் கருதி உடனே, "அன்புள்ள மாதே, பயப்படாதே; நான் இளவரசன்" என்ருர். அதைக்கேட்ட அவள் திக்குமுக்காடிய வண்ணம் "இளவரசா?" என்று கேட்டாள். அப்போதும் அஞ்சாமல் இளவரசர், "ஆம், நான் இளவரசனே! நான் உன் அழகைக் கண்டு மோகங்கொண்டிருக்கிறேன். உன்னை நேசிப்பதுடன் உனக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் செய்து கொடுக்கவும் தயாரா யிருக்கிறேன். அதாவது உன்னிடம் உண்மையான அன்புள்ளவன் என்பதை நிரூபித்துக்கொள்வதற்கு வேண்டியவைகளை யெல்லாம் செய்யச் சித்தமாக இருக்கிறேன். இளவரசர் உன்னை நேசித்தால் நீ நல்ல நிலைமையை அடையலாம் என்பதை நீ அறியாயோ? சிறிதும் கொள்கையற்ற அயோக்கியனை உன் கணவனைவிட என்னை நம்புவதால் நீ சுகமாகவும், கௌரவமாகவும் வாழலாம்," என்று கூறினர்.

இதையெல்லாம் கேட்ட அம்மாது, "நீர் இங்கு இருக்கிறீர் என்பதை என் கணவன் அறிவாரோ?" என்று வினவினள். அதற்கு இளவரசர், "இல்லை, தெரியாது. நான் உனக்கு இன்னமும் சமாதானம் சொல்ல விரும்புகிறேன்" என்ருர். அதற்கு அம்மாது, "அப்படியானல் அவர் இப்

போது வருவாரே! ஒவ்வொரு நிமிஷத்திலும் அவர் இங்கு வரலாம். நான் என்னசெய்வேன்'' என்று அலறினாள்.

அப்போது இளவரசர் தைரியத்துடன் அவளைப்பிடித்து தன் மார்போடணைத்துக்கொண்டு, "மாதே! அதைரியப் படாதே; தைரியமாயிரு. உன் கணவன் இப்போது வந்து விட்டாலும் கதவைத்திறவாமலே உன் மனத்தை மாற்றி விட்டதாகவும் அவனை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் தெரிவித்துவிடு'' என்று சொல்லிக்கொடுத்தார். அதற்கு அவள், "இல்லையே! இங்கே இருப்பது மதனவல்லி என்று அல்லவோ என் கணவன் நினைத்திருப்பார். என் கணவன் பாவம் மதனவல்லியைத் துன்புறுத்த ஆரம்பித்துவிட்டதால் மதனவல்லியே என்னை இங்கு நியமித்திருக்கிறாள்'' என்று சொல்லிவிட்டாள். இவ்வாறு விஷயத்தை வெளியிட்டுவிடு வதால் ஏதேனும் தீமை விளையுமோ என்பதையும் அவள் கவனிக்கவில்லை.

அதைக்கேட்ட இளவரசர், "ஆம்; நீ முதலில் பேசியதி லிருந்து நான் அப்படித்தான் அறிந்துகொண்டேன். எனி னும் இதோ யாரோவரும் காலடிச்சத்தம் கேட்கிறது. பேசா மல் இரு'' என்றார். அப்போது இளவரசரும், மாரப்பன் மனைவியும் மூச்சுவிடாமல் நிசப்தமா யிருந்து வெளியில் என்ன நடக்கிறதென்பதைக் கவனித்தார்கள். வெளியே யாரோ இருவர் வந்து பாயின் அடியில் கைவிட்டுச் சாவி யைத் தேடுவதுபோல் தெரிந்தது. அதன் பின்னர் கதவைத் தள்ளிப் பார்த்ததில் அதைத் திறக்கமுடியாமற் போகவே மெல்ல அதைத் தட்டினார்கள். அப்போது இளவரசர் அம் மாதின் காதில் ஏதோ குசுகுசு என்று சொன்னார். அவள் படுக்கையிலிருந்து எழுந்து மெதுவாக இருட்டில் தட்டுத் தடுமாறிக் கதவினருகில் சென்று "யார் அங்கே?'' என்று

கேட்டாள். அதற்கு மதனவல்லியின் வேலைக்காரி, தான் கர்னல் மாரப்பனுடன் வந்திருப்பதாக அறிவித்தாள். அதற்கு அவள் உள்ளிருந்தபடியே, "கர்னலை வந்தவழியே போகச் சொல். நான் என் மனதை மாற்றிவிட்டேன். அவருடன் எத்தகைய சம்பந்தமும் நான் வைத்துக்கொள்ளமாட்டேன்" என்று கூறிவிட்டாள். அவ்வாறுகூறியதும் இளவரசர் அவளை மார்போடணைத்துக்கொண்டு படுக்கைக்குத் தூக்கிச் சென்றார். அவள் பயந்துபோய் மெய்நடுக்க மடைவதைக் கண்டார். அப்போது அவர், "அவர்களெல்லாம் எது வேண்டுமாயினும் நினைக்கட்டும்; எது வேண்டுமாயினும் செய்யட்டும்" எனக் கூறினர்.

அப்போது வெளியே திடீரென்று யாரோ இருவர் கைகலந்து சண்டை போடுவதுபோலத் தெரிந்தது. எனினும் சற்று நேரத்துக்கெல்லாம் எதிரிலிருந்த அறையின் கதவு திறந்து மூடப்பட்டதும் நிசப்தமாய்விட்டது. மாரப்பன் மனைவி அது என்னவென்று கேட்டாளாயினும் இளவரசர் அது அவர்களுக்குச் சம்பந்தமில்லாத ஏதோ விஷயமெனச் சொல்லி அவளைச் சமாதானம் செய்தார்.

117 - வது அத்தியாயம்

கர்னல் மாரப்பனின் கடிகாரம் நின்றுபோயிருந்ததால் அவன் குறிப்பிட்ட நேரத்துக்கு இருபது நிமிஷம் சாவகாசமாகவே மதனவல்லியின் மாளிகையின் பின்புற வாயிலுக்கு வந்தான். ஆதலின் மதனவல்லியின் வேலைக்காரியும் அவனுக்காகக் காத்திருக்க வேண்டியதாயிற்று. பிறகு அவன் வந்தபோது அவள் அவனை அழைத்துக் கொண்டு முன்னமே நாம் தெரிவித்தபடி மாரப்பனின்

மனைவியும் இளவரசரும் இருந்த அறையின்முன் சென்றாள். அங்கே வேலைக்காரி சாவிக்காகத் தேடியபோது அகப்படாத தால் சாவியைப் பாயின் அடியில்வைக்க மதனவல்லி மறந்து விட்டாளோ என்று நினைத்துக் கதவைத்தட்டினாள். அப் போது தான் மெதுவான குரலில் அவள் கர்னல் மாரப்ப னும் தன்னுடன் இருப்பதாகக் கூறினாள். அதற்குத்தான் மாரப்பனின் மனைவியும் உள்ளே இருந்துகொண்டு தன் மனதை மாற்றிக்கொண்டதாகவும், மாரப்பன் வந்தவழியே செல்லலாமென்றும் அறிவித்துவிட்டாள். ஆனால் அக்குரல் தன் மனைவியினுடையதென்று அவன் அறியவில்லை. உள் ளிருந்து கிடைத்த பதிலைக்கேட்டதும் வேலைக்காரி மாரப் பனைப் பார்த்தபோது மாரப்பன் அதிக கோபத்துடன் இருப் பதைக்கண்டாள்.

அப்போது அவள் மாரப்பனைப் பார்த்து, "ஐயா; இரும். இதில் ஏதோ தவறு ஏற்பட்டிருக்கிறது. நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன். சிறிதுநேரம் இங்கேயே தாம தித்து இரும்; உம்மை யாரேனும் சந்தித்துவிட்டால் செல்லப் பப்பிரபுவைப் பார்க்கவந்ததாகக் கூறும்" என்று சொல்லிவிட்டு மிக அவசரமாகச் சென்று மதனவல்லியின் படுக்கையறையை அடைந்தாள். ஆனால் அவ்வேலைக்காரி அங்கிருந்து சென் றதும் கர்னல் மாரப்பன் தன்மீது யாரோ ஒருவர் கையைப் போட்டுப் பிடித்துக்கொண்டதை யறிந்தான். அவன் அந்த ஆள் யாரென்று நன்றாகப் பார்த்ததில் அவனுடைய மீசை யின் அடையாளத்தால் அவன் கபூர் கிருஷ்ணன் என்பதை யறிந்தான். அவனுடைய பிடியினின்றும் விடுவித்துக்கொள் வதற்காக மாரப்பன் சிறிதுநேரம் தன்னாலியன்றவரை போராடினான். எனினும் அவனால் அசையவும் முடியவில்லை. இதற்குள் கபூர் கிருஷ்ணன் அவனை ஒரே தூக்காய்த்தூக்கி

எதிரிலிருந்த அறையில் கொண்டுபோய் அவ்வறையின் கதவைச் சாத்திக்கொண்டான். இந்த சத்தத்தைத்தான் மாரப்பனின் மனைவியும் இளவரசரும் அவ்வறையிலிருந்து கேட்டனர்.

எதிர் அறையில் மாரப்பனை எடுத்துச்சென்ற கபூர் கிருஷ்ணன், "வாயைத் திறவாதே. என் உத்தரவின்றி ஒரு அங்குலம் நகர்ந்தாலும் இதோ உன்னைத் துண்டு துண்டாக வெட்டிவிடுவேன்" என்றுசொல்லி மிரட்டினான். இதையெல்லாம் அனுபவித்த கர்னல் மாரப்பன் இவ்வாறு நடந்ததன் காரணத்தை யறியாமல் மதனவல்லியே ஏதோ சூழ்ச்சி செய்திருக்கிறாள் என நினைத்தான். தான் அங்கு வந்ததுமுதல் நிகழ்ந்த ஒவ்வொரு செயலையும் கவனிக்கும்போதும் அவனுக்கு அச்சந்தேகம் அதிகரித்தது. ஆகவே அவன் கபூரை நோக்கி, "எனக்கு எத்தகைய துன்பமும் விளைக்கவேண்டாம். நான் நீ சொல்கிறபடியே நடந்துகொள்கிறேன்" என்று கூறினான்.

மாரப்பனிடம் ஜன்ம விரோதத்தையுடைய கபூர் கிருஷ்ணன், "அடே அயோக்கியப்பயலே! ஜாக்கிரதை. அச்சமிருக்கட்டும்" என்றான். அதற்கு அவன், "ஐயா; நீ என்ன செய்யப் போகிறாய், உன்னுடைய உத்தேசமென்ன என்பதே தெரியவில்லை. நீ தயவுசெய்து என்னைத் தொந்தரை செய்யவேண்டாம். நான் இனி மதனவல்லிக்கு எத்தகைய தீமையும் செய்யமாட்டேன்," என்றான்.

ஒருவாறு விஷயங்களை உணர்ந்துகொண்ட கபூர் கிருஷ்ணன், "அப்படியா? மதனவல்லியை இனித் தொந்தரைசெய்யாம லிருக்கிறாயா" என்று கேட்டான். அதற்கு மாரப்பனும், "ஆம்; தொந்தரை செய்யமாட்டேன் என உறுதி கூறு

கின்றேன். ஆதலின் என்னையும் தொந்தரை செய்யாமல் விட்டுவிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்" என்றான்.

அதற்கு கபூர் கிருஷ்ணன் மாரப்பனைத் துன்புறுத்துவதில் அதிக பிரியமுள்ளவனாதலால், "உன்னுடைய தொண்டையை ஒரு காதுமுதல் மற்றொரு காதுவரை கிழித்துவிட வேண்டுமென்பதே என் அபிப்பிராயம். இதோ என் கையிலிருக்கும் மிகக் கூரானகத்தியை உபயோகிக்காமல் இருக்கும்படி சொல்கிறாயா?" என்று கேட்டான். இவ்வார்த்தைகளைக் கேட்ட கர்னல் மாரப்பனும் அச்சத்தால் நடுநடுங்கிப் போய்க் கபூர் கிருஷ்ணன்முன் மண்டியிட்டு சலாம் போட்டு, "ஐயா, அப்படிச்செய்யாதே. இவ்வளவு கொடுமையை நீ இழைக்கலாகாது. இவ்வாறு செய்யும்படி உன்னை மதனவல்லி தூண்டினாளோ?" என்று கூறினான்.

அதற்கு கபூர் கிருஷ்ணன், "அப்படி இருக்கும்போது நீ என்ன தைரியம்கொண்டு அவளைத் தொந்தரைசெய்ய முன் வந்தாய்? அன்று உன்னுடைய அறையிலேயே உன்னைப் போட்டு உதைத்தேனே ஞாபகமில்லையா?" என்று கேட்டான். இதனால் இன்னும் அதிக பயமடைந்த மாரப்பன், "ஐயோ கடவுளே! உன் நிபந்தனைகளைக்கூறி என்னை விடுதலை செய்துவிடு" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

இவர்களிருவரும் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போது கபூர் கிருஷ்ணன் ஒரு மெழுகுவர்த்தி விளக்கை ஏற்றிப்பார்த்தான். அந்த அறை யாரோ ஒரு மாதின் படுக்கையறையாய் இருக்கவேண்டுமென்று தெரிந்தது. கர்னல் மாரப்பன் தரையின்மீது மண்டியிட்டு இருகாங்களையும் கூப்பிய வண்ணம் நின்றிருந்தான். ஆனால் அங்கு ஏற்பட்ட வெளிச்சத்தால் அது கொலைக்களமல்லவென்றும், ஒரு படுக்கையறையென்றும் அறிந்த மாரப்பன் சிறிது தைரியங்கொண்டு

கபூர் கிருஷ்ணனைப் பார்த்து, "நீ பயமுறுத்தியபடி கொன்று விடமாட்டாய் என்றே நினைக்கிறேன்" என்றான். அதற்கு கபூர், "அப்படியா? ஐயோ பாவம் என்று கருதி நான் என் கத்தியை மடித்து வைத்துவிட்டு இவ்விளக்கை ஏற்றினேன். நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன் என்று நீ நினைப்ப தாக இருந்தால் இதோ அதை மறுபடியும் எடுப்பேன்" என்று கூறிக்கொண்டே தன் சட்டைப்பையில் கையைப் போட்டதும் மாரப்பன் அச்சத்துடன், "இல்லை, இல்லை; நீ சொல்கிறபடி செய்ய நான் தயாராக இருக்கிறேன்" என்று கூறினான்.

மாரப்பனை எப்படியாவது அவமானப்படுத்த வேண்டு மென்னும் ஆவலுடைய அவன் சிறிதுநேர யோசனைக்குப் பின்னர், "இதோ இந்தப் பெண் ஆடையை அணிந்து கொண்டு நீ இந்த மாளிகையினின்றும் வெளியில் செல்ல வேண்டும். உடனே இதை அணியாவிட்டால் இதோ பார். கத்தியை எடுத்து வெட்டிவிடுவேன்" என்று அச்சுறுத்தி னான். கபூர் கிருஷ்ணனே மாரப்பனின் உடைகளைக் களைந்து எடுத்துவிட்டுப் பெண் ஆடையை அணிவித்தான். பிறகு சிரித் துக்கொண்டே மாரப்பனை அவ்வறையினின்றும் வெளியே தள்ளிவிட்டான்.

இப்போது நாம் வேறு விஷயத்தைக் கவனிப்போம். மாரப்பனைவிட்டுச் சென்ற வேலைக்காரி மதனவல்லியின் அறைக்குச் சென்று பார்த்தபோது மதனவல்லி தனியாக உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். மதனவல்லி எதிர் பார்த்த தற்கு நேர்மாறாக அன்றிரவு காரியங்கள் நிகழ்ந்துகொண் டிருக்கின்றன என்பதை அவள் சிறிதும் அறியாள். தன் வேலைக்காரியைக் கண்டதும் மதனவல்லி, "காரியங்கள் ஒழுங் காக நடைபெற்றுக்கொண் டிருக்கின்றனவா என்று கேட்

டாள். அதற்கு அவ்வேலைக்காரி, "அதென்ன கேட்கிறாய்! சாவியைக் காணோம். அவ்வறைமட்டும் பூட்டப்பட்டிருக்கிறது. மாரப்பன் மனைவி உள்ளே இருந்துகொண்டு தன் மனதை மாற்றிக்கொண்டுவிட்டதாகக் கூறுகின்றாள்," என்று கூறினாள்.

இதைக்கேட்டு மதனவல்லி திடுக்கிட்டுப்போய், "அப்படியா! இதை நான் நம்பவில்லை. கர்னல் மாரப்பன் எங்கே இருக்கிறான்?" எனக் கேட்டாள். அதற்கு அவள், "அவரை அங்கேயே விட்டுவிட்டு உன்னைக் கேட்டுக்கொண்டு போகலாமென இங்கே வந்தேன்," என்றாள். அதைக்கேட்ட மதனவல்லி, "எனக்கொன்றும் தோன்றவில்லை. எப்படியாயினும் அவனை அங்கே விட்டிருக்கலாகாது. உடனேபோய் ஏதேனும் ஒரு சமாதானம்கூறி அவனை அனுப்பிவிடு. அவன் அங்கே உலாவிக்கொண் டிருக்கலாகாது," என்று சொன்னாள். அப்படியே வேலைக்காரியும் அவ்வறையின் கதவைப் போட்டுக்கொண்டு வெளியில் வந்து பார்த்ததில் மாரப்பன் அங்கே காணோம். என்னசெய்வதென்று யோசித்தாள். மதனவல்லியிடம்போய்ச் சொல்லிவிடலாமென எண்ணிய போது, மாரப்பன் அங்கே நிற்க பயந்துகொண்டு மாளிகையின் தோட்டத்திலுள்ள வாயிலின் பக்கமாகப் போய்விட்டிருப்பானென்றும், அவ்வாயிலின் சாவி தன்னிடமிருப்பதால் உடனேபோய் அக்கதவைத் திறக்கவேண்டுமென்றும் நினைத்து அங்கேபோனாள். ஆனால் அவ்விடத்தில் ஒருவரையும் காணோம். என்னசெய்வதென்று யோசித்தாள். ஒருகால் அவன் வழிதவறி அவஸ்தைப்பட்டுக்கொண் டிருப்பானென்றும் நினைத்தாள். ஆகவே அவள் மாளிகையின் பற்பல தாழ்வாரங்களிலும், வழிகளிலும் அலைந்து பார்த்தாள். இவ்வாறு இருபது நிமிஷம் கடந்துவிட்டது. இந்த நேரத்

தில்தான் கபூர் கிருஷ்ணனுக்கும் மாரப்பனுக்கும் இடையில் தகராறு நடந்துகொண்டிருந்தது.

இப்போது நாம் மீண்டும் மதனவல்லியைக் கவனிப்போம். அவள் தன் அறையில் தனியாக உட்கார்ந்துகொண்டு கர்னல் மாரப்பன் மனைவியின் நடத்தையைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தாள். மதனவல்லி அம்மாதை அவ்வறையில் விட்டு வரும்போது எல்லாம் சௌகரியமாகவே நடைபெறுமென நினைத்தாள். தான் கூறிய நிபந்தனைகளின்படி நடந்துகொள்வதாக உறுதி கூறிய அவள் தன் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளவேண்டிய அவசிய மென்னவென்பதும் அவளுக்குப் புலனாகவில்லை. தான் பாயின் அடியில் வைத்துவிட்டு வந்த சாவி எப்படி எங்கேபோகும் என்பது அவளுக்குத் தோன்றவில்லை. மாரப்பன் மனைவி உண்மையிலேயே மனதை மாற்றிக்கொண்டதாகவே இருந்தாலும் அவள் உள்ளே இருக்கும்போது வெளியில் பூட்டுபோட்டிருக்கும்போது அந்தச் சாவி எங்கே போய்விடும் என்று நினைத்தாள். அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லையென்றாலும் ஏதோ விசேஷசம்பவம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று மட்டும் சந்தேகப்பட்டாள். எனினும் யாதேனும் ஒரு ஆடவனுக்கு அச்சாவி அகப்பட்டு அவன் உள்ளேபோய் மாரப்பன் மனைவி தனக்குடன்படும்படி செய்திருப்பான் என்பது மட்டும் அவளுக்குத் தோன்றவில்லை. எனினும் தன் அறையைவிட்டு வெளியே வந்து மெதுவாகவும் யாருக்கும் தெரியாமலும் தாழ்வாரத்தின் வழியேபோய் மாரப்பன் மனைவியின் அறையில் என்ன நடக்கிறதென்று கவனிக்க விரும்பினாள்.

தன் விருப்பப்படியே அவள் வெளியில் சென்று மாரப்பன் மனைவி தங்கியிருந்த அறையினிடம் சென்றபோது

எதிர் அறையில் இரண்டு ஆடவர்கள் சண்டைபோடுவது போன்ற சத்தத்தைக் கேட்டு அச்சமடைந்தாள். அச்சத்தம் கர்னல் மாரப்பனும் கபூர்கிருஷ்ணனும் பேசியதால் உண்டானதாகும். ஆனால் அவ்வறையின் கதவும் போடப்பட்டிருந்ததால் அவள் அதை உணர்ந்துகொள்ளவில்லை. எனினும் தன் மாளிகையிலுள்ள ஒரு வேலைக்காரியின் அறையில் யாரோ இரு ஆடவர்கள் சண்டையிடவேண்டிய அவசியமென்ன என்பதில் மட்டும் அவளுக்கு அதிக சந்தேகமுண்டாயிற்று. அவள் அங்கேயே உலாவிக்கொண்டிருந்தால் யாராவது பார்த்துவிடுவார்கள் என்னும் அச்சத்தால் தன் அறைக்குப் போய்விட்டாள்.

அப்படி அவள் தன் அறைக்குச் சென்றபின்னரும் தன் வேலைக்காரி திரும்பிவாராததால் அவள் ஏன் வரவில்லையென்றும், எங்கு போயிருப்பாளென்றும் தெரியாமல் திகைக்கலானாள். அதனால் மதனவல்லி பொறுமையை இழந்து மறுபடியும்போய்த் தன் வேலைக்காரியைத் தேடலாமென்னும் உத்தேசத்துடன் தன் அறையைவிட்டு வெளியில் வந்தபோது தன் மாளிகை வேலைக்காரியின் அறையினின்றும் ஒரு மாது தள்ளப்பட்டு வெளிவந்ததைக் கண்டாள். அது மாது என்று அவள் நினைத்தாளே யொழிய பெண்வேடம் அணியும்படி செய்யப்பட்ட மாரப்பனே வெளிவந்தான் என்பதை அவள் அறியவில்லை. அந்த இரு ஆடவர்கள் சண்டை போட்டபோதும் அவ்வேலைக்காரியும் இருந்தாள் என்று அவள் கருதியபடியால் விஷயத்தை அறிந்துகொள்ளக் கருதி மதனவல்லி அவ்வேலைக்காரியின் பெயரைச்சொல்லிக் கூப்பிட்டாள். பெண்வேடம் அணிந்திருந்த கர்னல் மாரப்பனும் மதனவல்லியைக் கண்டதும் அவள், தான் எதிர்பார்த்த அறையிலிருந்து வெளிவந்ததைக்கண்டு ஆச்சர்ய மடைந்த

துடன் அவள் தன்னையே, ஒரு வேலைக்காரி என நினைத்துக் கூப்பிடுகிறுள் என்பதையும் அறிந்தான். உடனே அவன் மனதில் ஒரு சந்தோஷ உணர்ச்சி தோன்றலாயிற்று. தன் காரியம் நிறைவேற்றிக் கொள்ளத்தக்க சமயம் வாய்க்கிறதென்பதை அறிந்தான். கபூர் கிருஷ்ணனும் மாரப்பனை அறையிலிருந்து வெளியே தள்ளியதும் தான் இருந்த அறையின் கதவைச் சாத்திக்கொண்டுவிட்டான் என்பதும் மாரப்பனுக்குத் தெரிந்தது.

எனவே கர்னல் மாரப்பன் மிகச் சந்தோஷத்துடன் மதனவல்லி தனியாக அறையில் இருக்கிறுளென்பதை யறிந்து அவ்வறையில் விரைவாகப் புகுந்தான். ஆனல் அவன் வாயிற்படியைக் கடந்ததுமே குறிப்பால் அங்கேவந்த ஆள் வேலைக்காரி யல்லவென்றும், பெண்வேடம் தரித்துள்ள மாரப்பனே என்றும் அறிந்ததும் மதனவல்லி ஆச்சர்யமும் அச்சமும் அடைந்தாள். ஆனல் உடனே அவன் அக்கதவைச் சாத்திப் பூட்டிட்டுக்கொண்டு தன் பெண் உடையைக் களைந்தெறிந்து, "மதனவல்லி, இப்போது நீ என் கையில் பூராவாகச் சிக்கிக்கொண்டாய்" என்றுன்.

அதற்கு மதனவல்லி சிறிது தைரியத்துடன் இருப்பவளேபோல், "எங்கே இருந்தாய்? ஏன் இம்மாதிரி உடை அணிந்துகொண்டாய்" என்று கேட்டாள். அவன், "எல்லாம் உன்னுடைய சூழ்ச்சிதான்; கபூர் கிருஷ்ணனை என்மீது ஏவிவிட்டாயே! ஆயினும் சென்றதைப்பற்றிக் கவலையில்லை. இப்போது நீ என்னசொல்கிறுய்" என்றுன்.

மதனவல்லி:—என்ன கபூர் கிருஷ்ணனு? அவன் இம்மாளிகையில் இருக்கிறுனே?

மாரப்பன்:—ஏன் இம்மாதிரி பாசாங்கு செய்கிறுய்? நீ இதுவரையில் எந்த அறையில் இருந்தாயோ அதே அறைக்கு

எதிர் அறையில் அவனை நீ காவல் வைக்கவில்லையா? மேலும் நீ அவ்வறையி லிருந்துகொண்டு உன் மனதை மாற்றிக்கொண்டு விட்டதாகக் கூறினையே? என்னை ஏமாற்றி விடவேண்டுமென்பது உன் எண்ணமல்லவா? அப்போதே உன் வேலைக்காரி இல்லாதபோது அந்த கபூர் கிருஷ்ணன் என்னை எதிர் அறையில் கொண்டு போய் நன்ருக இடிக்கும்படி சொல்லி யிருந்தாயே. ஆ, மதனவல்லி! நீ மிகவும் கெட்டவள். இருக்கட்டும் இப்போது எனக்கு நற்காலம் பிறந்துவிட்டது''

என்று இவ்வாறு கூறிக்கொண்டே அவன் மதனவல்லி யின்மீது பாய்ந்து அவளது அழகிய கழுத்தில் தன்கையைப் போட்டு அவளை ஆலிங்கனம் செய்துகொண்டு, அவள் எவ்வளவு தடுக்க முயன்றும் அதை லட்சியம் செய்யாமல் அவள் முகம், தோள், முதலிய இடங்களிலெல்லாம் மனம்போன படி முத்தமிட்டான். அப்போது அவள், 'என்னை விட்டு விடு! இன்றேல் நான் உரக்கக்கத்துவேன்'என்ருள். அதற்கு அவன், 'ஓ! கத்து. வீட்டிலுள்ள அனைவரும் இங்கே வரும் படி செய். நானும் நீ குமாரவேல் பிரபுவை வைத்துக்கொண்டிருக்கிருய் என்பதுபற்றி எனக்குத் தெரிந்ததை யெல்லாம் சொல்லிவிடுகிறேன்' என்ருன்.

உடனே அவள் அதிக கோபமடைந்து, 'அடே அயோக்கியா! ஆனல் நான் உன்னை சும்மா விடமாட்டேன்' என்று கூறிக்கொண்டே தன் முழுபலத்தையும் உபயோகித்து அவனை வீசியெறிந்து எதிரில் மேஜைமீதிருந்து ஒரு கத்தியைக் கையில் எடுத்துக் கொள்ளும்பொருட்டு அதை நோக்கிச் சென்ருள். ஆனல் கர்னல் மாரப்பன், எப்படியேனும் தன் காரியத்தை அப்போது முடித்துக்கொண்டு விடவேண்டுமென்னும் ஆவலையும் அதற்கேற்ற துணிவையும்

அடைந்து விட்டபடியால் மதனவல்லி அக்கத்தியை எடுக்கப் போகிருள் என்பதை யறிந்த அவன், அவளைவிட அவசர மாகச்சென்று அதைத் தன்கையில் எடுத்துக்கொண்டான்.

அப்போது அவன் அவளைப்பார்த்து, 'மதனவல்லி! நீ உன் சொற்களாலும் செயல்களாலும் என்னைப் பைத்தியக் காரனுக்கிவிட்டாய். ஆகவே இப்போது நான் எதற்கும் துணிந்துவிட் டிருக்கிறேன். என்னசொல்கிருய்!' என்று அதட்டிக் கேட்டான். அவன் எந்த நிலைமையில் இருக்கிருன் என்பதை அறிந்த மதனவல்லி சிறிது, அச்சத்துடன், 'மாரப்பா! சிறிது நிதானமாக யோசனைசெய்து பார்' என்று கேட்டுக் கொண்டாள்.

மாரப்:—என்னிடம் இனி நிதானமென்றும், யோசனையென்றும் பேசவேண்டாம். உடனே நீ என்னிஷ்டத்திற்கு உடன்படு; இன்றேல் இதோ இந்தக் கத்தியால் குத்திக்கொன்று விடுவேன்.

மதன:—அக்கத்தியைக் கீழே வீசி எறிந்துவிடு. தயவு செய்து என் கோரிக்கையைச் சிறிது கவனித்துக் கேள்.

மாரப்:—முடியவே முடியாது. நீ எவ்வளவோ மோசம் செய்து விட்டிருக்கிருய். உன்னை இனி நம்பவே முடியாது. நீ அன்புடன் எனக்கு உடன்படமாட்டாய் என்பதை நான் அறிந்துகொண்டு விட்டேன். ஆதலின் நான் பயமுறுத்தியேனும் என் காரியத்தைத் தீர்த்துக் கொள்வதைத் தவிர வேறுவழி எனக்கில்லை.

மதன:—அப்படியே நான் உன் இஷ்டப்படி நடப்பதாக இருந்தால் என் இரகசியங்களை யெல்லாம் வெளியிடாம லிருப்பாயா?

மாரப்:—என்னுடன் அன்பாகச் சினேக முறையில் நடந்து கொள். நானும் உன்னுடன் அன்பாகவே நடந்து கொள்வேன். நாம் இருவரும் பழைய சங்கதிகளை மறந்துவிட்டு இப்போது இன்பத்தைச் சந்தோஷமாக அனுபவித்து விட்டால் எதிர்காலத்தில் நமக்குள் எத் தகைய மனத்தாங்கலும் இராது.

மதன:—அப்படியே உன் இஷ்டப்படி நடந்து கொள்வதாக உறுதி கூறுகிறேன். நான் உனக்கு இதோ இணங்கு கின்றேன். ஆயினும் யாரோ வாயிலில் வருகிறது போல் கேட்கிறது. சிறிது மௌனமாயிரு, என்று கூறிக் கொண்டே கதவினிடம் சென்று வெளியில் கதவைத் தட்டுவது வேலைக்காரியா என்றுகேட்க அவ ளும் ஆம் என்று சொன்னதால், "இப்போது செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. ஆதலின் நீ போய்ப்படுத் துக் கொள்ளலாம்" என்றுகூறி அனுப்பிவிட்டாள்.

அவ்வாறு வேலைக்காரியை அனுப்பிவிட்ட மதனவல்லி, எதிரில் இருக்கும் மாரப்பனை மனமார வெறுத்துக் கேவல மாகக் கருதினுளென்றாலும் காலநிலையின் கோலத்தை யொட்டி ஒன்றும் பேசமுடியாமல் நடக்கிறபடி நடக்கும் என்னும் எண்ணத்துடன் பெட்டியிற்போட்ட பாம்புபோல் அடங்கியவளாய்த் தன் தேகத்தை அவனிடம் ஒப்படைத் துச் செத்த சவம்போல் கிடந்தாள்.

நேயர்காள்! ஸ்திரீ புருஷசேர்க்கையில் ஆடவரும் மக ளிரும் மனமாரக் கலந்து ஒற்றுமை யுணர்ச்சியுடன் இருந்தா லொழிய பலாத்காரத்தால் தொடங்கப்படும் அச்சேர்க்கை யானது பிணத்துடன் சேர்வதற் கொப்பாகுமென்றும், அதில் எத்தகைய இன்பமும் இராதென்றும் நமது பெரியோர்கள்

கூறியிருக்கின்றனர். ஆனால் காமப்பித்தர்களுக்கு அப்பித்தம் தலைக்குமேல் ஏறிவிடுவதால் அவர்கள் எத்தகைய ஒழுங்கான முறைகளையும் கவனியாமல் மிருக உணர்ச்சி பெற்றவர்களாய் ஆத்திரத்தில் தங்கள் வேலைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்களே யொழிய அதில் உண்மையான இன்பம் இருக்கிறதா என்பதையும் கவனிப்பதில்லை. அப்படிப்பட்டவர்கள் மிருகங்களினும் கேடானவர்களே என்று கூறவேண்டும். ஏனெனின் பெண்மிருகம் மனமாரச் சம்மதித்தாலொழிய ஆண்மிருகம் அதில் சிறிதும் ஈடுபடாது. அப்பெருந்தன்மையான உணர்ச்சியும் ஆறறிவுபடைத்த மனிதர்களுக்கு இல்லாமற் போவது வருந்தத் தக்கதே யாகும்.

118 - வது அத்தியாயம்

இப்போது நாம் இவ்வாறு மதனவல்லி அவஸ்தைப் படும் அதே இரவில் அவளது கணவன் என்று பெயர்தாங்கிய செல்லப்பப்பிரபு என்னசெய்கிறார் என்பதைக் கவனிப்போம். அன்றிரவு சுமார் பத்துமணிக்கு அவர் இளவரசரோடும், கபூர் கிருஷ்ணனுடனும் சம்பாஷித்துக்கொண்டிருந்தபோது திடீரென்று ஏதோ ஒருமாதினால் எழுதப்பட்ட கடிதம் கிடைத்ததால் எழுந்து சென்றார் என்று முன்னர் கூறியிருப்பதை நண்பர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நம்புகிறோம். அக்கடிதம் குமாரவேல் பிரபுவின் மனைவியாகிய ஏகநாயகிச் சீமாட்டியால் எழுதப்பட்டதாகும். அக்கடிதம் பின்வருமாறு வரையப்பட் டிருந்தது:—எனது அன்புள்ள செல்லப்பப் பிரபுவே! நான் இன்றிரவு உங்களைப் பார்க்க வேண்டியது மிக அவசியமாக இருக்கிறது. நாம் இருவரும் பல முக்கியமான விஷயங்களைப்பற்றி நீண்டநேரம் பேச

வேண்டியிருப்பதால் சொற்பமணி சாவகாசம் நீங்கள் என்னுடன் காலங்கழிப்பீர்களென நம்புகிறேன். இக்கடிதத்தைக் கொண்டுவரும் எனதுதோழி நான் இருக்குமிடத்துக்குத் தங்களை அழைத்து வருவாள். தங்கள் அன்புள்ள ஏகநாயகி.

இக்கடிதத்தைக் கண்ட செல்லப்பப்பிரபு நாம் மேலே கூறியபடி இளவரசர், கபூர் கிருஷ்ணன் ஆகிய இருவரிடமும் சொல்லிவிட்டு மாளிகையை விட்டு வெளியே வந்து வாடகை வண்டி யொன்றை அமர்த்திக்கொண்டு உலகாம்பாள் என்னும் உலகநாயகிச் சீமாட்டியின் மாளிகைக்குச் சென்று சேர்ந்தார். அவர் சென்ற சிறிது நேரத்துக்குள் ஒருமாது ஏகநாயகியின் தோழியாகிய ஜகதாள் அணியும் உடையுடன் அங்குவந்து செல்லப்பப் பிரபுவின் வண்டியில் ஏறிக்கொண்டாள். உடனே இருவரும் சேர்ந்து வண்டியை வேறொரு தெருவிற்குச் செலுத்திச் செல்லும்படி சொல்லிவிட்டுத் தங்கள் விஷயத்தைச் சம்பாஷிக்க லானார்கள்.

அப்போது அவ்வண்டியின் பக்கத்திலே ஒரு மனிதன் தன்னை இன்னானென்று பிறர் அறிந்து கொள்ள முடியாதபடி நன்றாக ஆடைகளால் மூடிக்கொண்டு நடந்து சென்ற வண்ணம் வண்டியிலுள்ள காதலர்களிருவரும் பேசுவதைக் கவனித்து வந்தான்.

வண்டியில் ஏறிய ஜகநாயகிச் சீமாட்டி, ஜகதாளின் உடையைக் களைந்து எறிந்துவிட்டு, தன் காதலனுக்கு அன்புடன் முத்தமிட்டு, என் அன்புள்ள நேசா? இப்போது ஒரு நெருக்கடியான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது, என்றாள் அதைக்கேட்ட செல்லப்பப்பிரபு அவளது கழுத்தில் தன் கரத்தைப்போட்டு அவளை இன்னும் அருகில் இழுத்து அணைத்

துக்கொண்டு "ஆ, உன் கணவனு! குமாரவேல் பிரபுவா?" என்ருர்.

ஏகநாயகி;—அவரிடமிருந்து ஒருகடிதம் கிடைத்திருக்கிறது. அதில் அவர் நாளை இரவு வீடுவந்து சேர்வதாக எழுதி யிருக்கிருர். அக்கடிதத்தை ஒரு ஆள் மூலம் அனுப்பி யிருக்கிருர்.

செல்லப்பப்பிரபு:—அக்கடிதம் உனக்கு எப்போது கிடைத் தது.

ஏகநாயகி:—இன்று இரவு சுமார் ஒன்பது மணிக்குக்கிடைத் தது.

செல்லப்:—ஏகநாயகி! அவர் இவ்வளவு விரைவில் வரவேண் டிய காரணமென்ன? யாரோ நம்மைப்பற்றி அவருக்குத் தெரிவித்துவிட் டிருக்கவேண்டும். அல்லது வேறு சூழ்ச்சி நடந்திருக்கவேண்டும். ஆதலின் நமக்கு ஏதோ அபாய மிருக்கிறதென்று நம்பு. நாளை இரவுவருவதற் குப் பதிலாக அவர் இன்று மாலையே வந்துவிட்டிருப் பார் என்றும் நான் நினைக்கிறேன், உன் மீது அவருக் குச் சந்தேகம் ஏற்பட்டுப் போயிருக்கிறது. இன்றேல் உனக்கு இப்படிப்பட்ட கடிதம் எழுதமாட்டார். ஏமாற்றவே நாளை வருவதாக எழுதி இன்றே வந்து உன் நிலைமையைக் கவனிக்கிருர்போ லிருக்கிறது.

ஏக:—ஆம், ஆம், நானும் அப்படித்தான் நினைக்கிறேன். நீ சொல்கிறபடியே நானும் நம்புகிறேன். அன்று இரவு ஒன்பது மணிக்கு ஒரு ஆள் அக்கடிதம் கொண்டுவந்து கொடுத்துவிட்டு உடனே போய்விட்டதிலிருந்து நானும் ஜகதாளும் சந்தேகப்படுகின்ருேம். இன்று இரவு உன் னைப் பார்க்கவேண்டாமென அவள் என்னைக் கேட்டுக்

கொண்டாள். ஆயினும் என் மனம் கேட்கவில்லை. குழப்பமாக இருக்கின்றது. என் நிலைமையைக் கண்டு எனக்குப் பைத்தியம் பிடித்ததுபோலாயிற்று. ஆதலின் அதை மறக்கும் பொருட்டு உன்னை வரவழைத்தேன்.

செல்:—சென்றதைப்பற்றி நினைத்து வருந்துவதில் பயனில்லை. இப்போது நாலரை மாதங்களாக அவர் ஊரில் இல்லையல்லவா?

ஏக:—ஆம்; நான் இப்போது மூன்றுமாத கர்ப்பிணியாக இருக்கின்றேன். இதனால் எனக்குப் பழி ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை. நான் பிரசவிக்கப்போகும் குழந்தைக்கு குமாரவேலரே தந்தை என்று ருஜுப்பிக்கவும் முடியாது. மேலும் அவர் புறப்படுவதற்கு முன்னரும் என்மீது அவருக்குச் சந்தேகமே.

செல்:—உன் கணவன் வெளிநாட்டுக்குச் செல்லாமலேயே இரத்தினபுரியிலேயே ஒளிந்திருந்து, உனக்கு எழுதிய கடிதங்களை மட்டும் ஆங்காங்குள்ள சினேகிதர்கள் மூலம் அனுப்பிவிட்டு உன் நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்தால் என்ன செய்வாய்?

ஏக:—இல்லவே இல்லை. அப்படி இருக்கமுடியாது. அப்படி இருந்ததாகவே வைத்துக்கொண்டாலும் நான் எடுத்துக்கொண்டிருக்கும் சகலவித எச்சரிக்கைகளையும் கவனிக்கும்போது அவரால் ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாதென்பது நிச்சயமாய்த் தெரியும். எனினும் எனக்குப் பழி ஏற்படக்கூடிய நிலைமை உண்டாய்விட்டதற்காக வருந்துகிறேன்.

சேல்:—அப்படியானல் என்னசெய்வது? அன்புள்ள ஏக நாயகி! நான் உனக்கு இச்சமயத்தில் செய்யக்கூடிய உதவிதான் என்ன?

ஏக:—எனக்கும் ஒன்றும் தெரியவில்லையே. நான் எப்போதும் இவ்வளவு துக்கத்துடன் இருந்ததில்லை. நான் இப்போது எல்லா தைரியங்களையும், உற்சாகத்தையும் இழந்துவிட்டேன். பழிக்கு ஆளாகிக் கெட்டபெயர் வாங்கிய பல மாதர்களுடன் என் பெயரும் சேர்ந்து விடும் என்பதில் ஆட்சேபமில்லை.

அதைக்கேட்ட செல்லப்பப்பிரபு, "தைரியமாக இரு" என்று கூறிக்கொண்டே அவளை அணைத்துக்கொண்டு முத்தமிட்டு ஆறுதல் வார்த்தைகளால் தேறுதல் கூறினர். இதற்குள் வண்டியும் மகா அயோக்கியளான கௌரியின் வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தது. உடனே ஏகநாயகி முகமூடியை அணிந்துகொண்டு வண்டியைவிட்டு இறங்கினள். செல்லப்பப்பிரபுவும் வாடகையைக் கொடுத்து வண்டிக்காரனை அனுப்பிவிட்டு ஏகநாயகியின் கையைப் பிடித்துக்கொண்டு கௌரியின் வீட்டிற்குள் அழைத்துச்சென்றூர். அவர்கள் வந்த வண்டியின் பக்கத்திலேயே நடந்துவந்த ஒரு ஆள் மிக ஜாக்கிரதையாக ஒளிந்து ஒளிந்து அவ்வண்டியுடனேயே வழி முழுதும் வந்து இறுதியாக அவர்களிருவரும் கௌரியின் வீட்டில் நுழைந்ததையும் பார்த்தான். இதை அக் காதலர்களிருவரும் அறியமாட்டார்கள். அவர்களுக்கு இப்படிப்பட்ட காரியம் நிகழ்கிறதென்னும் சந்தேகமும் உண்டாகவில்லை.

இப்போது நாம் உலகநாயகி என்னும் உலகாம்பாள் வீட்டிலிருந்து செல்லப்பப்பிரபுவும் ஏகநாயகியும் புறப்பட்ட பிறகு அங்கு என்ன நடக்கிறதென்பதைக் கவனிப்போம்.

அவர்கள் புறப்பட்டவுடனே குமாரவேல்பிரபு அவ்வீட்டுக்குப்போய்க் கதவைத்தட்டினுன். ஒரு வேலைக்காரி வந்து கதவைத்திறந்தபோது அவன் அவ்வீட்டு எஜமானி இருக்கிருளா என்று கேட்டதற்கு வேலைக்காரியும் இருப்பதாகப் பதிலளித்தாள்.

அப்போது அவன், "ஏகநாயகிச் சீமாட்டியும் உன் எஜமானியுடன் இருப்பாளென்றே நினைக்கிறேன்" என்று ஒன்றும் தெரியாதவனைப்போல் கேட்டான். அதற்கு அவ்வேலைக்காரியும், "ஆம்; பிரபுவே; ஏகநாயகிச் சீமாட்டி சுமார் அரைமணி நேரத்துக்கு முன்புதான் இங்கேவந்தார்" என்று பதில் கூறினுள். அதைக்கேட்ட குமாரவேல்பிரபு, "ஆம்; நானும் அப்படித்தான் எனது மாளிகையில் கேள்விப்பட்டேன். நான் வெளிநாட்டுக்குப் போயிருந்து இப்போதுதான் வந்தேன். எனது மனைவி இங்கே வந்திருப்பதாகக் கேள்விப்பட்டு இங்கேவந்தேன்" என்றுன்.

அச்சமயத்தில் அவ்வீட்டு எஜமானியாகிய உலகநாயகியும் யாரோ கதவைத்தட்டுகிருர்களே என்பதை அறிந்து மாளிகையிலிருந்து கீழே இறங்கிவந்தாள். குமாரவேல்பிரபுவைக் கண்டதும் உதறல் எடுத்துவிட்டது. எனினும் ஒருவாறு தைரியமடைந்து புன்சிரிப்புடன் அவனை வரவேற்றுள். "இப்போதுதான் அந்நிய நாட்டிலிருந்து திரும்பினீரோ" என்று கூறிக்கொண்டு உள்ளேவரும்படி அழைத்துச் சென்றுள். பிறகு அவள் அவனைப்பார்த்து, "எப்போது வந்தீர்கள்; நாளை மாலையில்தான் நீங்கள் வருவீர் என நான் கேள்விப்பட்டேன்" என்றுள். அதற்கு அவன், "நான் எதிர்பார்த்ததற்கு முன்பாகவே புறப்பட்டுவிடும்படி ஏற்பட்டது. ஏகநாயகி இங்கே உன்னுடன் இருக்கிருள் என்று நம்புகிறேன்" என்று கூறினுன்.

உலகநாயகி:—ஆம்; இன்றிரவு முழுதும் என்னுடன் தங்கவே அவள் வந்தாள். ஆனல் நான் என் மகளைப்போல் நேசிக்கின்ற உன் மனைவிக்கு உடனே ஏதோ அசௌக்கியம் கண்டிருக்கிறது. அதனல் அவள் மாளிகையின் மீது படுக்கச்சென்றிருக்கிருள். ஆனல் ஆபத்து ஒன்று மில்லை.

குமாரவேல்பிரபு:—ஆம்; அவளுக்கு அதிசீக்கிரத்தில் தேக அசௌக்கியம் ஏற்பட்டிருக்கவேண்டும். ஏனெனின் அவள் உன் வீட்டுக்குவந்தே அரைமணி நேரம்தானே ஆகிறது.

உலக:—உண்மைதான்; சீக்கிரமாகவேதான் அசௌக்கியம் ஏற்பட்டது. உனக்கும் உடம்பு ஒருமாதிரி இருப்பது போல் தோன்றுகிறதே. நான் நல்ல இனிய மது பானத்தை வைத்திருக்கிறேன். சிறிது அருந்துகிருயா?

குமார:—அவ்வாறு கூறியதற்காக அனேகவந்தனம். ஆனல் எனக்கு இப்போது மதுபானம் வேண்டாம். ஆனல் அதரபானம் அவசரமாகத் தேவை. என் மனைவி என்னைப்பார்க்க ஆவலுடன் இருப்பாள். எனக்கு அவளை என் மார்போ டணைத்துக்கொண்டு சரச சல்லாபங்கள் செய்யவேண்டுமென்னும் ஆவல் அதிக மிருக்குமல்லவா? ஆதலின் அவளைக்காண என்னை அனு மதி யளிப்பாயோ?

உலக:—ஆனல் அவள் ஆழ்ந்த நித்திரையில் இருக்கிருளே! ஆதலின் இப்போது நீ அவளைத் தொந்தரை செய்ய லாகாது.

குமார.—அவளைத் தொந்தரை செய்யவேண்டிய அவசிய மில்லை. ஆயினும் நான் அவள் அருகில் இருக்கத்

தான் வேண்டும். நான் இப்போது மாடிமீது ஏறிப் போவேன்.

உலக:—ஐயா! உன்னை நான் மாடிமீது அழைத்துச்சென்றால் என் வேலைக்காரிகள்தான் என்ன நினைப்பார்கள்? இது உனக்குத் தெரியவில்லையா?

குமார:—நினைப்பதென்ன? என் மனைவி படுத்திருக்கும் அறைக்கு என்னை அழைத்துச் செல்கிறாய் என்றுதான் நினைப்பார்கள். அதில் என்ன தவறு?

உலக:—இப்போது உலகம் அவ்வளவு யோக்கியமானதாக இல்லை. உடனே நம்மிருவருக்கும் ஏதோ சம்பந்தமிருப்பதாகக் கூறிவிடமாட்டார்களா? அப்பழி எனக்கு வரும்படி நீ செய்யலாமா?

குமார:—அதெல்லாம் தவறு. நீ இன்னும் யௌவனமாய் இருந்தால் ஒருகால் அவ்வாறு நினைத்தாலும் நினைக்கக்கூடும். ஆனால் உனக்கு இப்போது நாற்பது வயதுக்குமேல் ஆகிறது. அப்படியே உனக்கு அச்சமாயிருந்தாலும் நீ வேறு யாரேனும் உன் வேலைக்காரிகளை என்னுடன் அனுப்பு.

உலக:—ஆனால் அவள் நித்திரையைப் பங்கம் செய்யலாகாதென டாக்டர் கூறியிருக்கிறாரே. நீ எப்படி மேலே செல்லமுடியும்?

குமார:—டாக்டரை வரவழைக்கும்படி அவளுக்கு என்ன ஏற்பட்டுவிட்டது. அவ்வளவு அபாயமா? அப்படியானால் நான் உடனே பார்க்கவேண்டியது அவசியமல்லவா? இவ்வளவு விரைவில் அசௌக்கியம் ஏற்பட்டு டாக்டரையும் வரவழைத் தாய்விட்டதென்றால் யார்தான் அதை நம்புவார்கள்.

உலக:—(கோபமடைந்தவள்போல்) உன்னை ஏமாற்றுவதில் எனக்கு என்னலாபமுண்டு. நான் இப்படிப்பட்டவள் என்று தெரிந்தபிறகு நீ ஏன் இங்கு வரவேண்டும்.

குமார:—(இன்னும் அதிக கோபத்துடன்) நான் பொறுத்துக்கொள்ள முடியாது. இதுவரை வாக்குவாதம் செய்ததுபோதும். உடனே என் மனைவியை என்னிடம் ஒப்புவித்துவிடு. இன்றேல் மனஸ்தாபம் அதிகரிக்கும். வீட்டில் குழப்பத்தை உண்டாக்கி நானே பலாத்காரமாக என் மனைவி படுத்திருக்கும் அறைக்குச் செல்ல வேண்டிய அவசியமும் ஏற்படும். அவ்வளவுதூரம் நிலைமை கெட்டுப்போகும்படி வைத்துக்கொள்ளமாட்டாய் என்று நம்புகிறேன்.

உலக:—முடியாது. நீ என் வீட்டில் இவ்வாறு கட்டாயப்படுத்தமுடியாது. என் மாடிமீது ஏறிப்போக உனக்கு என்ன உரிமை இருக்கிறது?

குமார:—நீயே மரியாதையாக என்னை மாடிமீது அழைத்துச் செல். இன்றேல் நானே மாடிமீது ஏறிப்போவேன். எனக்கு வழி நன்றாகத்தெரியும். நீயாக நல்வழிக்கு வருவாயென நினைத்தேன். இன்னமும் நீ தாமதம் செய்கிறாயா?

உலக:—(அவன் கையை இறுகப்பிடித்துக்கொண்டு) உனக்கு இதெல்லாம் யார் சொன்னது? இங்குள்ள விஷயங்களை உனக்கு வெளிப்படுத்தியது யார்?

குமார:—நீ இவ்வாறு விஷயங்களை மறைத்து வைப்பதன் காரணம்தான் என்ன? எனக்கு இவ்விஷயங்களை என் மனைவியின் கள்ளக்காதலனாகிய கர்னல் மாரப்பன் கூறினான்.

உலக:—அயோக்கியன்! அவன் வஞ்சகன் என் நான் முன்னரே அறிவேன். அப்படியானல் உன் மனைவியின் விஷயங்கள் உனக்குத் தெரிந்துவிட்டதென்று நினைக்கிறேன்.

குமார:—உண்மையில் சொல். இப்போது உன் மாளிகையில் இருப்பவள் ஏகநாயகியின் வேடமணிந்த ஜகதாள் தானே. ஏகநாயகி தன் மற்ருெரு காதலனுடன் ஜகதாளின் வேஷமணிந்து கௌரியின் வீட்டுக்கு ஒரு வண்டியில் செல்லவில்லையா? ஏகநாயகி எவ்வளவுதான் ஜாக்கிரதையாகவும் இரகசியமாகவும் தன் காரியத்தை நடத்தினுலும் விஷயம் எனக்கு வெளியாய்விட்டது. எல்லாப் பெண்களாலும் தந்திரமாய் நடந்துகொண்டுவிட முடியாது.

உலக:—ஐயா! தயவுசெய்து நிதானித்துப்பார். உன் மனைவியைப் பகிரங்கமாகப் பழித்துவிடாதே. அவளை அவமானப்படுத்தாமல் இரு.

குமார:—அப்படியானல் நான் இப்போது முதலில் அந்த ஜகதாளைப் பழிவாங்க விரும்புகின்றேலே. அவள்தான் என் மனைவியின் கெட்ட நடத்தைக்கெல்லாம் காரணம். ஒன்றுக்கும் அகப்படாமல் மிகச் சாமர்த்தியமாய்த் தப்பிவருகிருள். அவள் என் மனைவியின் உடையைத் தான் இப்போது அணிந்திருப்பாளென்பது நிச்சயம். ஆதலின் அவளை என் மனைவி என்றே நினைத்தவன் போல் இப்போது பெண்டாளவேண்டும். ஆதலின் நீ ஒன்றும் பேசாமல் அவ்வறைக்கு வழிகாட்டிக்கொண்டு போ. இன்றேல் எனக்கே வழி தெரியுமாதலால் நானே போய்விடுவேன்.

இதைக்கேட்ட உலகநாயகி வேறு விதியில்லாமல் குமாரவேல்பிரபுவை மாடிமீது அழைத்துச் சென்றாள். ஜகதாள் படுத்திருக்கும் அறைக்குச் சொற்பதூரம் வரை சென்றதும் உலகாம்பாள் நின்றுவிட்டாள். குமாரவேல், எதிரிலிருந்த அறை ஒன்றின் கதவைத்திறந்து அது காலியாய் இருப்பதால் அவ்வறையில் உலகாம்பாளைச் செல்லும்படி கட்டளையிட்டான். தன்னை அவ்வறையில் போகும்படி சொல்லவேண்டிய காரண மென்னவென்பதை அறியாத உலகாம்பாள் திகைத்தபோது குமாரவேல், "நான் ஜகதாளுடன் பேசிக்கொண்டிருக்கும்போது நீகௌளரியின்வீட்டுக்கு ஆளையனுப்பி விஷயங்களை எனது மனைவியாகிய ஏகநாயகிக்குத் தெரிவித்துவிடாமலிருக்கும்பொருட்டு உன்னை இவ்வறையில் போட்டுப் பூட்டுவேன்," என்றான்.

குமாரவேலின் வார்த்தைகளைக் கேட்ட உலகாம்பாள், "என்னை ஒருமணிநேர சாவகாசம் சிறையிலிடுவதுபோல் இவ்வறையில் அடைக்கலாகாது" என்றாள். அதற்கு அவன், "அவ்வாறு இருப்பதால் என்னகுற்றம். என் மனைவி பன்னிரண்டு மணிக்குத்தானே வண்டி கொண்டுவரும்படி சொல்லியிருக்கிறாளாம். ஆதலின் அந்த ஒருமணி நேரம் நீ ஜகதாளுடன்தானே பேசிக் காலத்தைக் கழித்திருப்பாய். ஆகையால் அந்த ஒருமணிநேரம் நீ இந்த அறையில் இருப்பதால் பாதகமில்லை" என்று சமாதானம் கூறினான். அவனுடைய கட்டளைப்படி நடக்காவிட்டால் அவன் தன்னுடைய அயோக்கியச் செயல்களைப்பற்றி வெளியிட்டுவிட்டால் பெயர் கெட்டுப்போகுமே என்னும் அச்சத்தினல் உலகநாயகி அவனிஷ்டப்படி அவ்வறையில் சென்றாள். அவனும் அதைப் பூட்டிவிட்டுச் சாவியைத் தன் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு அதே தாழ்வாரத்தின் கோடியில்

ஜகதாள் ஏகநாயகியின் உடையை அணிந்து படுத்துக்கொண் டிருந்த அறைக்குச் சென்றான்.

119 - வது அத்தியாயம்.

அந்த அறையில் ஏகநாயகிச் சீமாட்டியின் தோழியாகிய ஜகதாள் வெல்வெட் அங்கியை அணிந்து கொண்டு பட்டாடை உடுத்தி ஆடம்பரமாக அங்கிருந்தாள். அப்போது குமாரவேல் பிறகு மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு போனபோது உலகாம்பாள்தான் வருகிறாளென நினைத்து அவள் தன் தலையைத் திருப்பிப்பாராமல் இருந்து விட்டாள். எனினும் குமாரவேல் பிரபு உள்ளே நுழைந்ததும் அங்கேயே நின்றுகொண்டு அத்தோழியின் அழகைக் கவனித்துக்கொண் டிருந்ததால் உள்ளே நுழைந்த உலகாம்பாள் தன்னிடம் வராதகாரணமென்னவென நினைத்த ஜகதாள் திரும்பிப் பார்த்தாள். அப்போது அங்கே நிற்பது தன் எஜமானன் என்பதை அறிந்ததும் அவள் திகிலடைந்தாள்.

இதற்குள் குமாரவேல் பிரபு அவளைத் தன் மனைவியென்றே பாவிப்பவன்போல், "எனது அன்புள்ள ஏகநாயகி! என்று கூறிக்கொண்டே அவள் உட்கார்ந்திருந்த சோபாவினருகில் அவசரமாகச் சென்றபோது வேண்டுமென்றே எதிரில் இருந்த மெழுகுவர்த்தி விளக்கு கீழேவிழுந்து அணைந்து விடும்படி செய்துவிட்டு அதனால் ஏற்பட்ட இருட்டில் சோபாவின்மீது உட்கார்ந்து கொண்டு ஜகதாளை வாரிஎடுத்து அணைத்து, "எனது அன்புள்ள ஏகநாயகி! தெரியாமல் மெழுகுவர்த்தி விழுந்துவிடும்படி நடந்து கொண்டதற்காக மன்னிக்கவும், இருந்தாலும் பாதகமில்லை. நாம் இருவரும்

இருட்டிலேயே சௌகரியமாகப் பேசலாம். நீ ஏன் இப்படி நடுக்கமடைகின்ருய்'' என்று கூறிக்கொண்டே அவள் கன்னங்களிலும் உதடுகளிலும் மற்றும் பல அங்கங்களிலும் சாமாரியாக முத்தமிட்டு நிரப்பினுன்.

சொற்பநேரம் வரை ஜகதாள் திக்பிரமையடைந்து ஒன்றும் தோன்ருதவளாக இருந்தாள். அவன் தன் மனைவியல்லாமல் வேருெருமாது இருக்கிருள் என்பதை உண்மையிலேயே அறியவில்லையா? அவன் தெரியாமல் தான் மெழுகு வர்த்தி விளக்கு விழும்படி நடந்து கொண்டானு என்பன போன்ற பலகேள்விகள் அவள் மனத்தில் தோன்றலாயின. எப்படி யிருப்பினும் அவள் என்னபதில் அளிப்பது என்பது பற்றி அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை.

குமாரவேல் பிரபுவோ அவளை வேண்டுமென்றே சரசசல்லாபங்கள் செய்துகொண்டே, "எனது அன்புள்ள ஏகநாயகி! என்னுடன் பேசலாகாதா! ஒரு முத்தமாவது கொடுக்கக் கூடாதா? உன் அதரத்தையேனும் என் உதட்டின்மீது வைத்து அழுத்தலாகாதா! என்று கேட்டான்.

அப்போது அவன் அவளை மார்போடணைத்து முத்தமிட்டபோது அவள் விடுவித்துக்கொண்டு செல்லமுடியாமல் சும்மா இருந்ததால் அவள் சம்மதித்துவிட்டதாகவே கருதி, "அன்புள்ள ஏகநாயகி! நீ இப்போது முத்தமிடுவதைப்பார்த்தால் நீஎன்னிடம் கோபிக்கவில்லையென்பது நன்ருகத் தெரிகிறது.என்அன்பானமுத்தங்களைப்பெற்று திருப்பியும் நீமுத்தமிடுவதைக்காண உண்மையில்சந்தோஷமாகவே இருக்கிறது. நாம் இருவரும் இனி சென்றதைப்பற்றிக் கவனிக்கவேண்டாம். நான் இல்லாதபோது நீ என்னசெய்தாய் என்பது பற்றி நான் கேட்பதில்லை. நீயும் நான் வெளியூரில் என்ன செய்தேனென்று கேட்கவேண்டாம்'' என்று கூறினுன்.

ஜகதாள் உலகத்தில் நடைபெறக்கூடிய மோசடிகளை யெல்லாம் அறிந்தவளாயிருந்தும் இப்போது சும்மா இருந்த தன் காரணம் யாதெனின், அவளும் யௌவன பிராயமுள்ள பெண்பாலாதலாலும், அதுவரை ஆண்சம்பந்த மில்லாதவளாய் இருந்ததாலும் இருட்டில் ஒரு அறையில் தனக்குத் தெரிந்த அழகு வாய்ந்த ஒரு ஆடவன் தன்னை அணைத்துக் கொண்டுச் சாரசல்லாபங்களைச் செய்ய ஆரம்பிக்கவே அவளுக்கு புருஷசேர்க்கையில் இச்சை அதிகரித்து விட்டது. ஆதலின் குமாரவேல்பிரபு எத்தகைய சரசங்களைச் செய்த போதும் அவள் அதற்குச் சம்மதிப்பவளேபோல் பாவனை காட்டினாள். ஆனால் தன்னை அப்பிரபு ஏகநாயகி என்று நினைத்திருக்கிறாரா அல்லது ஜகதாளென்று அறிந்தும் பழி வாங்க யோசித்திருக்கிறாரா என்னும் சந்தேகம் மட்டும் அவளுக்கு அதிகமாயிற்று.

பிறகு அந்த அறையில் என்னநடந்தது என்பதுபற்றி நாம் விவரித்துக்கொண் டிருக்கவேண்டியதில்லை. குமாரவேல் தன் மனைவியுடனேயே இவ்வாறு நடந்துகொள்வது போல் நினைப்பதாகப் பாவனை காட்டினான். ஜகதாளும் தன் தேகத்தை எஜமானனாகிய குமாரவேலிடம் ஒப்புவித்துவிட்டாள். இவ்வாறாகக் குமாரவேல் தன் பழியைத் தீர்த்துக் கொண்டு விட்டபிறகு அவளைப் பார்த்து, "ஏகநாயகி! இப்போது நடுநிசியாகி விடவில்லையா? நீ உன் வண்டியை இப்போது தானே கொண்டுவரும்படி சொல்லியிருக்கிறாய்? ஆதலின் சரியாய் உடையை அணிந்துகொள். புறப்படுவோம்" என்றான்.

தன்னையே ஆண்டு அனுபவித்த பின்னரும் தான் ஏகநாயகி யல்லவென்பதை குமாரவேல் உணரவில்லையா என்பதில் அவளுக்குச் சந்தேக மதிகரித்துவிட்டது. எனினும் விதியில்லாமல் அவள் அங்கே வைக்கப்பட்டிருந்த முகமூடி

யையும் அணிந்துகொண்டு அவனுடன் புறப்பட்டாள். உடனே கதவைத் திறந்துகொண்டு இருவரும் வெளிவந்தனர். தாழ்வாரத்தில் எரிந்துகொண்டிருந்த விளக்கின் வெளிச்சத்தில் ஜகதாள் மட்டும் மெதுவாகக் குமாரவேலின் முகத்தைப் பார்த்து ஆனந்தித்தாள். குமாரவேல் அவள் இன்னுளென்று அறியாதவனேபோல் இன்னமும் பாவனை காட்டிக்கொண்டு சிறிதுதூரம் சென்றதும் ஒரு அறையின்முன் நின்றுகொண்டு, "என் கண்ணே! நம்முடைய இன்பக் கூட்டுறவுக்குக் காரணமாயிருந்த உலகநாயகிச் சீமாட்டி இதோ இந்த அறையில் காத்திருப்பதாகச் சொன்னுள். அவளேயும் கூப்பிடுவோம்" எனக் கூறிக்கொண்டே அவ்வறையின் கதவைத்திறந்தான். அப்போது உலகாம்பாள் வெளியே வரவே குமாரவேல்பிரபு மிக அவசரத்துடன், "அம்மா! இதோ நாங்களிருவரும் புறப்பட்டுப் போகிறேம். நானும் எனது அன்புள்ள ஏகநாயகியும் மிக இன்பத்துடன் இந்த ஒரு மணி நேரத்தைக் கழித்தோம். கணவனும் மனைவியுமாகிய நாங்கள் இவ்வாறு ஒரு சிநேகிதர் வீட்டில் இன்ப மனுபவித்ததற்காகச் சந்தோஷப்படுகிறேம். நாங்களிருவரும் எங்கள் பழைய மனஸ்தாபங்களை யெல்லாம் மறந்துவிட்டு மனமொத்த அன்பர்களாய்விட்டோம்" என்று கூறிக்கொண்டே ஜகதாளை ஒரு கையாலும், உலகாம்பாளை ஒரு கையாலும் பிடித்துக்கொண்டு மாடிமீதிருந்து படிக்கட்டுகளின் வழியாக இறங்கிவந்தான். அப்போது அவர்களிருவரும் ஒருவருடன் ஒருவர் எத்தகைய சங்கேதமும் செய்துகொண்டுவிடக் கூடாதென்னும் எண்ணத்துடன் அவர்களிருவரையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டே இறங்கினன். உலகாம்பாளுக்கு குமாரவேல் செய்யும் தந்திரங்களும் சூழ்ச்சிகளும் நன்ருய்த்தெரியுமாயினும் அவள் அச்சத்தால் ஒன்றும் பேசாமல் வாய்மூடி மௌனியாய் இருந்தாள்.

அவர்கள் மூவரும் கீழே காவல்காரன் காவல்காக்கும் ஹாலுக்கு வந்ததும் குமாரவேல்பிரபு உலகநாயகியினிடம், "அம்மா! நீ என் மனைவிக்குச் செய்யும் உபகாரத்துக்கு அவள் உனக்கு வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறாள். எத்தனையோ இரவுகளில் அவள் உன் வீட்டில் இன்பமாகக் காலங் கழித்திருக்கிறாள்" என்று கூறிக் கொண்டே ஜகதாளைப் பார்த்து, "என் அன் அன்புள்ள ஏக நாயகி! இந்த வெயில் நாளிலும் நீ முகமூடி அணிவதேன்?" என்று கூறிக்கொண்டே அதே சமயத்தில் யாரும் எதிர்பாராத வகையில் அவன் தன் கையால் அவள் முகமூடியை அப்புறப்படுத்திவிடவே அந்த உருவம் ஏகநாயகி யல்லவென்றும், ஜகதாள் ஏகநாயகியின் வேடம் அணிந்திருக்கிறாளென்றும் தெரிந்துவிட்டது. அதைப் பார்த்துக் காவல்காரனும், ஏக நாயகிக்காகக் காத்திருந்த வண்டிக்காரர்களும் ஆச்சரியமும் பிரமிப்பு மடைந்தார்கள். ஜகதாள் பாடு திண்டாட்டமாய் விட்டது. குனிந்த தலையை நிமிர்த்தவே இல்லை. உலகாம்பாளுக்கும் அவமானமாய்விட்டது.

உடனே குமாரவேல்பிரபு, தன் வண்டிக்காரர்களைப் பார்த்து, "பார்த்தீர்களா! உங்கள் எஜமானி இங்கே இல்லை. அவளுடைய தோழியாகிய ஜகதாள்தான் இங்கே அவள் வேடமணிந்து இருக்கிறாள். இதோ வண்டியில் உட்காருகிறேன். வண்டியை விரைவாகச் செலுத்துங்கள். உங்கள் எஜமானி இருக்கும் இடத்துக்குச் செல்வோம்" என்று கூறிக்கொண்டே வண்டியில் உட்கார்ந்தான். ஆட்களும் வண்டியைச் செலுத்தலாயினர். குமாரவேல்பிரபு செய்த தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் கண்டு உலகாம்பாளும், ஜகதாளும் ஆச்சர்யமும் பிரமிப்பும் அடைந்து அவன் எல்லாருடைய இரகசியங்களையும் அறிந்துகொண்டு விட்டதுபற்றித் திகிலும் அடைந்தனர்.

இரவு சுமார் பன்னிரண்டரை மணிக்கு குமாரவேலின் வண்டியும் கௌரி என்னும் மற்றொரு அயோக்கிய மாதின் வீட்டுவாயிலை யடைந்தது. அவ்வண்டியினின்றும் குமாரவேல்பிரபு இறங்கியதும், அங்கே அவர் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த விசுவநாதன், "ஐயா, இந்த வீட்டில்தான் அவர்களிருவரும் இருக்கிறார்கள்" என்றான். அதற்கு குமாரவேல், "ஏகநாயகியும் வட்டித் தொழிலையுடைய வேலப்பனுமா?" என்றான். அதற்கு அவன், "அதைப்பற்றி எனக்குச் சந்தேகமில்லை" என்று கூறவே குமாரவேல்பிரபு, "இந்த வீட்டில் ஏகநாயகியுடன் உன் எஜமானன் வேலப்பன்தான் இருக்கவேண்டும். அப்படி யில்லையென்றால் அவள் வேறு ஒரு காதலனைத்தேடி இருக்கவேண்டும். எதற்கும் பார்ப்போம்" என்று கூறிக்கொண்டே அவ்வீட்டில் நுழைந்தான். விசுவநாதனும் உடன் சென்றான். வாயில்காக்கும் மாது குமாரவேல்பிரபுவைக் கண்டதும் திடுக்கிட்டாள். அன்றிரவு ஏதோ குழப்பம் நடக்குமென அஞ்சினாள்.

இதற்குள் குமாரவேல்பிரபு, அவ்வாயில் காக்கும் மாதினிடம் சென்று, "என் மனைவி மாடிமீது இருக்கிறாள். என் பேச்சை நீ மறுக்கமுடியாது" என்றான். அதற்கு அவள், "வீண்குழப்பம் செய்யாதீர்! நீங்கள் மற்றொரு மாதுடன் இதே வீட்டுக்கு வரும்போது உங்கள் மனைவி வேறொரு புருஷனுடன் வருவதில் ஆச்சர்யமென்ன இருக்கிறது?" என்று கேட்டாள்.

அதற்கு அவன், "சரி, பேசாதே; எனக்கும் என்னுடனிருக்கும் என் சிநேகிதருக்கும் மாடியில் என் மனைவி இருக்கும் இடம் காண்பி. இன்றேல் நானே நேராக ஒவ்வொரு அறையையும் பார்த்துக்கொண்டே போய்விடுவேன்" என்றான். அதைக்கேட்ட அவ்வேலைக்காரி குமாரவேலின்

உறுதியைக்கண்டு தான் வழி காண்பிக்காவிட்டால் அவன் ஒவ்வொரு அறையாகப் பார்த்துக்கொண்டே போய்விடுவானென்றும், அதனுல் அம்மாளிகையின் மர்மங்களெல்லாம் வெளியாய்விடுமென்றும் அஞ்சினுள். ஏனெனின் அம்மாளிகையின் மர்மம் மிக விசித்திரமானது. அம்மாடியில் பல அறைகள் இருக்கின்றன. அவ்வறைகள் அங்நகரிலுள்ள கள்ளக் காதலர்களுக்குப் புகலிடமாக இருக்கின்றன. ஒரு அறையில் அங்நகரில் மிகப் பக்தியுள்ளவள் என்று பெயர் பெற்ற ஒருமாது கேவலம் குதிரைவண்டியோட்டும் சேவகனுடனும், மற்ருெரு அறையில் பிரசித்திபெற்ற புரோகிதர் தாழ்ந்த ஜாதிப் பெண்ணுடனும், வேருெரு அறையில் மிக்க நீதிமான் எனப் பெயர்பெற்ற நீதிபதி அங்நகரில் மிகக் கேவலமெனக் கருதப்பட்ட வியபிசாரியுடனும் இவ்வாருகப் பல திறப்பட்டவர்கள் இருந்தார்கள். ஆதலின் அவற்றையெல்லாம் குமாரவேல் பார்த்துவிடக் கூடாதென்னும் எண்ணத்துடன் வேலைக்காரியே அவ்விருவருக்கும் ஏகநாயகி படுத்திருந்த அறைக்கு வழி காட்டினுள்.

அவ்வறையின் முன் போய் நின்றதும் குமாரவேல்பிரபுவின் உள்ளத்தில் ஒருவித ஆறுதல் உணர்ச்சி ஏற்பட்டது. ஏனெனின் அப்போதுதான் அவன் தன் மனைவியின் ரகசியங்களையும், வியபிசார நடத்தைகளையும், சூழ்ச்சிகளையும் பகிரங்கமாகவும் நேர்முகமாகவும் கண்டுபிடித்து அவளைப் பழிவாங்க சமயம் வாய்த்திருக்கிறது. அக்கதவைத் தள்ளிப்பார்த்தான். உட்பக்கம் பூட்டப்பட்டிருந்தது. எனினும் அவனுக்கிருந்த ஆத்திரத்தாலும் ஆவேசத்தாலும் அவன் தன் முழுபலத்துடன் அக்கதவைத் தள்ளியதும் அது படீர் என்று திறந்துகொண்டது. உள்ளே விளக்கு பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. இருவரும் உள்ளே புகுந்து அங்கிருக்கிறவர்

களைப் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி அங்கே வட்டித்தொழிலை யுடையவனான வேலப்பன் காணப் படவில்லை. அதற்குப் பதிலாக அழகு வாய்ந்த மதனவல்லி யின் கணவனான சௌந்தர்ய புருஷனான செல்லப்பப்பிரபு இருப்பதைக் கண்டார்கள்.

செல்லப்பப்பிரபு நிதானித்துப் படுக்கையில் எழுந்து உட்கார்ந்துகொண்டு, "இப்போது எத்தகைய குழப்பமும் செய்யாதே. நாளையதினம் நான் உனக்கு நீ கோரும் சமா தானத்தை அளிக்கின்றேன்" என்று குமாரவேல் பிரபுவை நோக்கிக் கூறினான். ஏகநாயகியோ தன் இருகரங்களாலும் முகத்தை மூடிக்கொண்டு தன் நிலைமையைக்கண்டு பெரு மூச்செறிந்தாள். விசுவநாதன், அங்கு தன் எஜமானன் இல்லாததையும் வேறொருவர் இருப்பதையும் அறிந்து வெட் கப்பட்டு அறைக்கு வெளியில் சென்று நின்றான்.

குமாரவேல்பிரபு உடனே செல்லப்பப்பிரபுவுக்குப் பதில் அளித்துவிடாமல் சிறிதுநேரம் ஏதோ ஆழ்ந்து சிந்திப் பவன்போல் செல்லப்பப்பிரபுவை உற்று நோக்கியவண்ணம் நின்றான். அப்போது அவன் உண்மையில் நினைத்தது என்ன வென்றால், தான் செல்லப்பப்பிரபுவின் மனைவியாகிய மதன வல்லியிடம் இரகசியமாகவும் அக்கிரமமாகவும் கூட்டுறவு ஏற் படுத்திக்கொண்டபோது செல்லப்பப்பிரபுவும் தன் மனைவி யாகிய ஏகநாயகியுடன் இரகசியமாகக் கூட்டுறவுகொள்வதில் தவறு என்ன இருக்கிறது என்பதேயாம். இதனால் அவன் தன் மனைவி செல்லப்பப்பிரபுவின் கரத்தில் இருப்பதைக் கண்டு ஆச்சர்யப்படவில்லை. ஆயினும் அவன் விழித்து நோக்குவதைக் கண்ட செல்லப்பப்பிரபு ஒருகால் அவன் ஏதேனும் மற்றும் தக்க சமாதானம் எதிர்பார்க்கிறானோ என்று நினைத்து, "குமாரவேலரே! நாம் இருவரும் அதிக

நட்பினர்களாயிருந்தும் நான் இவ்வாறு நடந்துகொண்டதற்காக நீ என்னை அதிகம் வெறுக்கிறாய்போலும்!'' என்றான். அதற்கு அவன் "ஆம்; உன் நடத்தையைக் கண்டு நான் அப்படித்தான் வெறுப்படைகின்றேன். ஆயினும் நான் இதற்கெல்லாம் தக்க ஏற்பாடு செய்திருக்கிறேன் என்பதை நீ விரைவில் அறிவாய்'' என்று கூறிவிட்டுத் தன் மனைவியைப் பார்த்து, "கடைசியாக நான் உன் சங்கதிகளையெல்லாம் கண்டு பிடித்துவிட்டேன். எனக்கு எல்லாம் தெரிந்துவிட்டது. இப்போதுதான் உன் தோழி ஜகதாளையும் உலகநாயகியின் சேவகர்கள் முன்னிலையிலும் என் சேவகர்கள் முன்னிலையிலும் அவமானப்படுத்திவிட்டு வந்தேன்'' என்று அசட்டுச் சிரிப்புடன் கூறினான்.

இதையெல்லாம் மிகத் துக்கத்துடன் கேட்டுக்கொண்டிருந்த ஏகநாயகி, "ஓ, அப்படியானால் என் விஷயங்களனைத்தும் வெளியாய்விட்டதோ? என தன்புள்ள நாதா! தாங்கள் என்மீது வெற்றி பெற்றுவிட்டீர்கள். ஆனால் நீர் யாரை இப்போது 'அழிக்க முயற்சிக்கிறீர் என்பதைக் கவனிக்க வேண்டும். ஒரு காலத்தில் நான் உன்னை அதிகம் நேசித்தேன். ஆனால் நீ நடந்துகொண்ட முறைகளால் நான் என் நடத்தையை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. உன்னைப் போன்ற ஒருவனை முன்மாதிரியாகக் கொண்ட நான் இதைவிட வேறுவிதமாக நடந்துகொள்ள முடியாது. இப்போது நான் உடன் இருப்பதால் உன் இஷ்டப்படி காரியங்களைச் செய்ய முடியாமலிருப்பதோடு என்னைப் பாதுகாக்கக்கூடிய சக்தியும் இப்போது உனக்குக் குறைந்துவருகிறது. ஆகவே என்னை விலக்கிவிட ஏதேனுமொரு காரணம் அகப்படுமா என்று காத்திருந்தாய் போலும். நான் இரத்தினபுரியை விட்டு வெளியேறிவிடுகிறேன். ஆனால் நான் கேட்டுக்கொள்

வது ஒன்று உண்டு'' என்று கூறிக்கொண்டே தன் கணவனை யும் தன் காதலனையுமாக நோக்கி, "நீங்கள் இருவரும் கேவலம் எனக்காக உங்கள் உயிரை மாய்த்துக்கொள்ளலாகாது'' என்று கூறினள். அவ்வாறு கூறும்போது அவள் தான் படுத்திருந்த படுக்கையினின்றும் எழுந்து உட்கார்ந்தாளேயொழிய தன் ஆடையையும் சரியாக அணியாததால் அவள் பாதி நிர்வாணத்துடன் உட்கார்ந்திருந்ததுபோலவே காணப் பட்டது.

ஏகநாயகி கூறியதைக் கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்த குமாரவேல்பிரபு, "அம்மா, அது விஷயத்தில் என் இஷ்டம்போல் நடந்துகொள்வேன்'' என்றான். இவ்வாறு கூறிக்கொண்டே திடீரென்று வெளியே புறப்பட்டவன் மறுபடியும் ஏதோ நினைத்துக்கொண்டவன்போல் உள்ளே சென்று, "உலகாம்பாள் வீட்டினிடம் காத்திருக்கும்படி சொன்ன உன் வண்டி இதோ வெளியில் காத்திருக்கிறது. நீ ஏறிச்செல்லலாம்'' என்று கூறிவிட்டு அவ்வறையை விட்டு வெளியேவந்தான். அங்கே காத்துகொண்டிருந்த விசுவநாதனுடன் கூடிக்கொண்டு மாடியைவிட்டுக் கீழே இறங்கி அங்குக் காத்துக்கொண்டிருந்த வண்டிக்காரர்களிடம், "இதோ உங்கள் எஜமானி இந்த வீட்டில் வேறொரு காதலனுடன் சுகித்துக்கொண்டிருக்கிறாள். அதையும் கண்டு பிடித்து அவமானப் படுத்திவிட்டேன். அவளும் வருவாள்'' என்று சொல்லிவிட்டுத் தன் மாளிகைக்குப் புறப்பட்டான்.

வழியில் விசுவநாதன், "ஐயா, எனது எஜமானன் வேலப்பனைப் பழி வாங்குவதில் எனக்கு மிக்க துணைபுரிவதாகத் தாங்கள் வாக்களித்தீர்களே. இப்போது அவன் அகப்படவில்லை. ஆகையால் அவன் விஷயமாய் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறீர்'' என்றான். அதற்குக் குமார

வேல்பிரபு, "நான் என் வாக்குறுதிகளை மறந்துவிடவில்லை. நான் வேலப்பன், செல்லப்பப்பிரபு ஆகிய இருவர்மீதும் வழக்கு தொடரப்போகின்றேன். சில தினங்களுக்குமுன், உன்னிடம் ஒரு கடிதம் அகப்பட்டதாகவும், அது ஏகநாயகிச் சீமாட்டியால் எழுதப்பட்டதென்றும் கூறினையல்லவா? அக்கடிதத்தை எப்படியாவது கொண்டுவந்துவிட்டால்" என்றான். இதற்குள் விசுவநாதன், "ஆம், ஆம், அக்கடிதத்தால் உமது மனைவியின் அயோக்கியத்தனமெல்லாம் வெளியாகும் என்பது உண்மையே. முதலில் நான் அக்கடிதத்தை எடுக்க அஞ்சியதுண்டு. ஆனால் இப்போது நான் துணிந்துவிட்டேன். எப்படியாவது அவனைப் பழிவாங்கித்தான் ஆகவேண்டும். ஆதலின் இரண்டொரு நாட்களில் அக்கடிதத்தை நிச்சயமாகக் கொண்டுவந்து கொடுப்பேன்" என்றான்.

பிறகு குமாரவேல்பிரபுவும், விசுவநாதனும் ஒருவரைவிட்டொருவர் பிரிந்துவிட்டார்கள். குமாரவேல் தன் மாளிகைக்குச் சென்று இனி என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்வதென யோசித்துக்கொண்டிருந்தான். விசுவநாதனோ தன் வீட்டுக்குச் சென்று எஜமான் பெட்டியிலுள்ள அக்கடிதத்தை எப்படி எடுப்பது? எந்தவகையில் அவனைப் பழிவாங்குவது என்று யோசித்துக்கொண்டிருந்தான்.

120 - வது அத்தியாயம்

இப்போது நாம் மதனவல்லியின் மாளிகையில் நடப்பதைக் கவனிப்போம். அம்மாளிகையில், இளவரசர் கர்னல் மாரப்பனுடைய மனைவியுடன் ஒரு அறையில் பூட்டப்பட் டிருப்பதையும், மற்றொரு அறையில் மதனவல்லி கர்னல் மாரப்பனுடைய காத்தில் அகப்பட்டுக் கொண்டு தன் தேகத்தை அவனுக்கு ஒப்புவித்துவிட்டதையும், மற்றோர் அறையில் கபூர் கிருஷ்ணன் பதுங்கியிருப்பதையும் நாம் முன் ஒரு அத்தியாயத்தில் படித்தோம். கர்னல் மாரப்பனைப் பெண்வேடம் அணியும்படி செய்து அவனைத் தான் இருந்த அறையினின்றும் தள்ளிவிட்ட பிறகு அவன் மாளிகையிலேயே நல்லதோர் இடத்தை யடைந்து விட்டான் என்பதை யறியாத கபூர் கிருஷ்ணன் அவன் மாளிகையை விட்டு வெளியே போய்விட்டிருப்பானெனக் கருதி வெளியில் யாருமில்லாமல் நிசப்தமாய் இருப்பது கண்டு, வெளியேவந்தான். அவன் நேரே முன்பு தானும், இளவரசரும், செல்லப்பப்பிரபுவும் உட்கார்ந்து சிற்றுண்டி யருந்திக்கொண்டிருந்த அறைக்குச் சென்று பார்த்தான். அன்று இரவு சுமார் பத்துமணிக்கு வெளியேபோன செல்லப்பப்பிரபு இன்னும் வரவில்லை. அவர் போகும்போதே விடியற் காலையில்தான் வரமுடியுமென்று சொல்லிப்போயிருந்தாராதலால் அவர் வரும்வரை அங்கேயே காத்திருப்பதென முடிவுசெய்து ஒரு ஆசனத்தில் அமர்ந்தான்.

அப்போது அவன் ஒரு மணியடித்து வேலையாள் வரும்படி செய்தான். அந்த வேலையாளிடம், "இவ்விடம் யாருமில்லாமல் நான் தனியாக இருக்கிறேன். எனக்கு வேண்டிய

இனிய மதுபான வகைகளைக் கொண்டுவா. அப்படியே என் ஆள் எச்சன் அங்கே இருந்தாலும் அவனையும் அழைத்து வா'' என்றான். அவ்வேலையாள் அப்படியே அவன் விரும்பிய மதுபானங்களைக் கொண்டுவந்து கொடுத்ததுடன் எச்சனையும் அழைத்து வந்துவிட்டுச் சென்றான். எச்சனைக் கண்ட கபூர் கிருஷ்ணன், "அடே எச்சா! பார்த்தாயா? என் சாமர்த்தியத்தை. நான் செல்லப்பப்பிரபுவுடனும், இளவரசனுடனும் சினேகமாய்விட்டேன். என் மதனவல்லிக்கும் நாம் உதவி செய்திருப்பதால் அவளும் சினேகமானவளே. ஆதலின் இங்கே நாம் சர்வ சுதந்தரத்துடன் சுகபோகங்களை அனுபவிக்கலாம். இந்த மதுபானபுட்டியை உடைத்து டம்ளரில் போட்டுத்தா. நீயும் வேண்டிய அளவு குடி'' என்று சொன்னான். இருவருமாகச் சிறிதுநேரம் குடித்தபிறகு கபூர் கிருஷ்ணன், எச்சனைப்போய்ப் படுத்துக்கொள்ளும்படியனுப்பிவிட்டான்.

அப்போது செல்லப்பப்பிரபுவும் அந்த அறையில் நுழைந்தான். அவனைக்கண்டதும் கபூர் கிருஷ்ணன், "பிரபுவே! இதோ நான் இங்கே இருக்கிறேன்'' என்றான். கௌரியின் வீட்டில் நடந்த சம்பவங்களால் அதிக கவலையும் அச்சமும் அடைந்திருந்த செல்லப்பப்பிரபு ஒருவாறு தேற்றிக்கொண்டவனாய், "ஓ, நீ இங்கேயே இன்னும் இருக்கிறாயா? எனக்கு மிகவும் சந்தோஷம். நாளை அல்லது மறுநாள் உன் உதவி எனக்கு வேண்டியதாக இருக்கும். ஏன்? மதுபானம் அருந்தவில்லையா?'' என்றான். அதற்குக் கபூர் கிருஷ்ணன், "இளவரசர் இங்கிருந்து செல்லுமுன்னரும், இப்போதும் எனக்கு வேண்டியதைக் குடித்தேன். ஆனால் உனக்கு என்னநேர்ந்தது? உன்னைப் பார்த்தால் ஏதோ வருத்தமடைந்தவன் போல் தோன்றுகிறது'' என்றான். அப்போது கபூர் கிருஷ்ணன் மிதமிஞ்சிக் குடித்துவிட்டிருந்தபடியால் அவனிடம் கூறு

186554
சென்னை-600 008

வதற்கு அது ஏற்ற சமயமல்லவெனக் கருதி செல்லப்பப் பிரபு, "நான் நாளையதினம் உன்னிடம் கூறுகிறேன்" என்று சொன்னான்.

அதற்குக் கபூர் கிருஷ்ணன், "அதெல்லாம் சரிப் படாது; இப்போதே சொல். உனக்கு யார் என்னசெய் தார்கள். ஆடவன் எவனேனும் தீங்கு இழைத்திருந்தால் அவன் தொண்டையைக் கிழித்துவிடுகின்றேன். பெண் ணொருத்தி தீமை செய்திருந்தால் அவளைப் பிடித்து நமது எச்சனுக்கு விவாகம் செய்துகொடுத்து அவளுடைய பெய ரைக் கெடுத்துவிடுவோம். நீ எதற்கும் பயப்படாமல் உடனே சொல்" என்று கூறினான்.

அப்போது செல்லப்பப்பிரபு, "வேண்டாம்; இப்படி வேடிக்கை செய்யாதே. நீ என் நண்பனாக இருக்க விரும் பினால் கெட்டிக்காரத்தனமாகவும், எச்சரிக்கையுடனும் நடந்துகொள்ள வேண்டும்" என்று சொன்னதற்குக் கபூர் கிருஷ்ணன், "இந்த நாட்டில் என்னைவிட வேறு சமர்த்தனை நீ காண்கிறாயா? அப்படியிருந்தால் அவன் என்னை விழுங்கி விடட்டும். இப்போது உன் துயரத்தைச்சொல். இதில் யாரோ ஒருமாது சம்பந்தப்பட்டிருப்பதாக எனக்குத் தெரி கிறது," என்றான்.

செல்லப்பப்பிரபு:—ஆம்; உயர்தர குடும்பத்தைச் சேர்ந்தவ ளும், மிக்க அழகானவளும், பெரும்பாலும் பலருக்குத் தெரிந்தவளுமான ஒருமாது என்னுடன் இருந்தபோது அவள் கணவன் எங்களைப் பார்த்துவிட்டான்.

கபூர் கிருஷ்ணன்:—இது வேடிக்கைதான். ஆனால் சிக்க லான விஷயமே. அந்த மாது யார்? நாளையதினம் ரத் தினபுரி முழுதும் இந்த ரகசியம் பரவிவிடுமே.

சேல்:—ஆம். நாளையதினம் பரவிவிடும் என்பது உண்மையே. அவள்தான் குமாரவேல்பிரபுவின் மனைவி, ஏகநாயகிச் சீமாட்டி.

க-கிரு:—அப்படியா? நான் அவளைப்பற்றிச் சிறிதும் சந்தேகப்படவில்லையே. அவள் கற்பே அவதாரமாகத் தோன்றியவள் என்றல்லவோ சொன்னார்கள்.

சேல்:—அதைப்பற்றி இப்போதென்ன? நடந்த உண்மை இதோ உன் எதிரில் இருக்கிறது. நானும் அவளும் கௌரியின் வீட்டில் இருந்தபோது ஒரே படுக்கையில் இருந்ததையும் குமாரவேல்பிரபு பார்த்துவிட்டான.

க-கிரு:—நல்ல இடம்தான். நல்ல பெயர்பெற்ற இடம். நானே ஒருமுறை அந்த வீட்டில் ஒரு மதபோதகரை, அவர் என்னைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் கொண்டுபோய்விட்டார் என்பதற்காக, அவர் தலையை உடைத்துவிட்டேன். அந்த ஏகநாயகியின் கதி என்ன?

சேல்:—அவள் இன்று இரவைத் தன் சகோதரியின் வீட்டில் கழிக்கப் போய்விட்டாள். நாளை காலை அவள் இரத்தினபுரியை விட்டு வெளியேறி விடுவாளெனத் தெரிகிறது.

க-கிரு:—இச்சம்பவம் நடைபெற்றது எப்போது?

சேல்:—இரவு பன்னிரண்டு மணிக்கு; ஆனால் நான் அவளைக் கொண்டுபோய் அவள் சகோதரி வீட்டில் விட்டு வருவதற்கும், பிறகு உலகாம்பாள் வீட்டுக்குச் சென்று அவள் தோழி ஜகதாளை அனுப்புவதற்கும் இவ்வளவு நேரமாய்விட்டது.

க-கிரு:—எல்லாம் எனக்குத் தெரிந்த விஷயத்தைப்போல் சொல்லுகின்றாயே?

சேல்:—ஆம். ஆனல் நான் இப்போது விவரங்களைச் சொல் லிக்கொண் டிருக்க முடியாது. எனக்கு மிக்க ஆத்திரமா யிருக்கிறது.

க-கிரு:—அப்படியானுல் போய்ப் படுத்துக்கொள். நாளை காலையில் நீ போய் குமாரவேலுடன் கத்தியுத்தம் செய் யத்தக்க பலத்தை யடைவாயாக. நான் உன்னுடன் உனக்குத் துணையாக இருந்து வேண்டியதைச் செய் வேன். நீ பயப்படாதே. ஒன்று அவன் சாகவேண் டும் அல்லது நீ சாகவேண்டும். அதுவரை விடாதீர் கள்.

சேல்:—இப்படி யெல்லாம் உளருதே. எனக்கோ மிகக் கவலையாக இருக்கிறது. கத்தியுத்தம் செய்வது பற்றி யல்ல. எப்படி யிருந்தாலும் அதைச் செய்துதான் ஆகவேண்டும். எனினும் அதனல் அவமானம் அதி கரித்துவிடுமே என்னும் கவலைதான் அதிகம்.

க-கிரு:—அது சரிதான். இதோ இப்படத்தில் காணப்படும் மதனவல்லி என்னசொல்வாளோ? அவளிடம் வசவு கேட்டுக்கொள்ள வேண்டியதுதான்.

சேல்:—எனக்கு மதனவல்லியைப்பற்றிக் கவலையில்லை. அதற் கெல்லாம் நான் அஞ்சமாட்டேன். ஏகநாயகிச் சீமாட் டிக்கு அவமானம் நேர்ந்துவிட்டதே என்றுதான் கவ லைப்படுகிறேன்.

க-கிரு:—சரி; நீ போய்ப் படுத்துக்கொண்டு இளைப்பாறு. நானும் இதோ இந்த சோபாவின்மீது படுத்துக்கொள் கிறேன். ஏதேனும் விரோதமான சமாசாரம் வந்தால் உனக்கு உதவிசெய்ய எப்போதும் தயாராக இருப் பேன்.

செல்லப்பப்பிரபுவும் கபூர் கிருஷ்ணன் கூறியபடியே தன் படுக்கையறைக்குச் சென்றான். தேகத்திலும் மனத்திலும் அவன் அயர்ச்சி யடைந்திருந்ததால் படுத்த சற்று நொத்துக்கெல்லாம் நன்றாய்த் தூங்கிவிட்டான். கபூர் கிருஷ்ணனும் கடைசி முறையாக ஒருதடவை சிறிது மதுபானம் செய்துவிட்டு அந்தச் சோபாவின்மீது சாய்ந்ததுபோல் உறங்கலானான்.

மறுநாட்காலை கபூர் கிருஷ்ணன் விழித்துக்கொண்ட போது அதிக வெளிச்ச மாய்விட்டிருந்தபடியால் மணி என்ன என்று தன் கடிகாரத்தைப் பார்த்ததில் எட்டுமணி என்று அறிந்தான். ஆகவே அவன் மிக அவசரமாக யாருக்கும் தெரியாமல் அதே தாழ்வாரத்தின் வழியாக இளவரசரும், மாரப்பன் மனைவியும் இருந்த அறைக்குச் சென்று அக் கதவைத் தன்னிடமிருந்த சாவியால் திறந்துவிட்டான். அவன் உடனே சிற்றுண்டி யறைக்குச்சென்று மணி யடித்துச் சேவகனை வரவழைத்து தான் எங்குபோய்த் தன் காலைக்கடன்களை முடிக்கலாமென்பதை அறிவிக்கும்படி கேட்டான். அவனும் அப்படியே காண்பிக்க, கபூர் கிருஷ்ணன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு காலை ஆகாரம் அருந்தத் தயாரானான்.

அதே ராத்திரியில் அந்த மதனவல்லியின் மாளிகையில் நடந்த மற்ற விஷயங்களைப்பற்றிச் சில சந்தர்ப்பங்களைச் சொன்னால் போதுமெனக் கருதுகிறோம். அதாவது கர்னல் மாரப்பன் மனைவி, இளவரசருடன் இன்பத்தை அனுபவித்ததுடன் மறுபடியும் எங்கே எவ்வாறு எந்த நிபந்தனையில் சந்திப்பது என்பதுபற்றி யெல்லாம் எதிர்காலத்தைக் குறித்தும் பேசிக்கொண்டுவிட்டு யாருக்கும் தெரியாமல் மெதுவாக அம்மாளிகையினின்றும் வெளியேறிவிட்டாள். இளவரசரும்

தான் மற்றொரு பெண்மணியுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ள நேர்ந்தால் மிகச் சந்தோஷப்பட்டதுடன் யாருக்கும் தெரியாமல் மெதுவாகத் தன் அறைக்குச் சென்றுவிட்டார்.

இப்போது மதனவல்லியின் அறையில் நடந்ததைக் கவனிப்போம். அங்கே காலை எட்டுமணிக்கு மதனவல்லி சோபாவில் சாய்ந்தவண்ணம், தான் வெறுக்கும் ஒருவனே தன் அழகின் இன்பத்தை அநுபவிக்கும்படி விட்டுக் கொடுக்கும்படியான பலவந்த சந்தர்ப்பம் நேர்ந்ததுபற்றிக் கவலையுடையவளாய் சிந்தித்தவண்ண மிருந்தாள். கர்னல் மாரப்பன் எழுந்து தன் ஆடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு நின்றான். அவ்வேளையில் மதனவல்லியின் தோழியும் அங்கே வந்தாள். வந்ததும் மாரப்பன் தன் எஜமானியின்மீது வெற்றிபெற்றதைக் கண்டு மகா ஆத்திரமடைந்தாள். எனினும் மதனவல்லி அதைத் தன் முகக்குறியால் அறிந்து, இப்போது அவனை ஒன்றும் சொல்லவேண்டாமென்றும், அப்படிப்பட்ட கட்டாயம் ஏற்பட்டதால்தான் அவள் சம்மதிக்கநேர்ந்ததென்றும், எனினும் பழிவாங்கக்கூடிய காலம் விரைவில் வருமென் பொருள்படும்படி சங்கேதக் குறிப்புகாட்டினாள். கர்னல் மாரப்பனோ தான் வெற்றி யடைந்துவிட்டதுபற்றி மிக சந்தோஷப்பட்டானென்றாலும் அது அவன் முகக்குறியால் தெரிந்ததே யொழிய அவன் வாயால் ஒன்றும் பேசவில்லை. உடனே மதனவல்லியின் தோழியும் மாரப்பனின் மேல்சொக்காயையும் மற்றொரு அங்கியையும் கபூர் கிருஷ்ணன் ஒளிந்திருந்த அறையிலிருந்து கொண்டுவந்து கொடுத்தாள். அவை அங்குபோனதற்கு ஏதோ ஒருகாரணம் அவளிடம் சொல்லப்பட்டது. பிறகு அவள் மாரப்பனை ரகசியமாக அழைத்துச் சென்று அம்மாளிகையின் வாயிலைத்திறந்து வெளியேவிட்

டாள். அப்போது அவள் மெதுவாக, "ஐயா, இந்த இரவு நீ வெற்றிபெற்றது பெரிய காரியமேயாயினும் கௌரவமான ஒரு மனிதன் பெருமை பேசிக்கொள்ளக் கூடியவகையில் உன் வெற்றி இல்லை" எனக் கூறினள்.

அதற்கு அவன், "உன் எஜமானி தன் தேகத்தையே என்னிடம் ஒப்படைத்ததுடன் தக்க பொருளுதவி செய்வதாகவும் வாக்களித்திருக்கிருள். மேலும் நாங்களிருவரும் சமாசம் செய்துகொண்டுவிட்டோம்," என்ருன். இவ்வாறு கூறிக்கொண்டே அவன் போய்விட்டான். அத்தோழியும் மதனவல்லியின் அறைக்குச் சென்ருள். அப்போது மதனவல்லி முன்நாள் இரவு நடந்த விவாத்தையெல்லாம் தன் தோழியினிடம் கூறிக்கொண்டாள். எனினும் அவர்களிருவருக்குமே மாரப்பனுடைய மனைவி அவ்வாறு நடந்துகொண்டதன் காரணமென்னவென்ருே அல்லது அந்த அறையில் என்ன நடந்ததென்ருே ஒன்றும்தெரியாது. மதனவல்லி தன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு ஆடை ஆபாணங்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டு அந்த மாரப்பனுக்குக் கொடுத்து அவன் வாயை அடக்கும்பொருட்டு மற்றும் ஐயாயிரம் சவரன்களைத் தனக்கு பாங்கிபாக அமைந்திருக்கும் சுகசிங்கம் பிரபுவினிடமிருந்து கொண்டுவரப் புறப்படும் சமயத்தில் மாரப்பனுடைய மனைவியிடமிருந்து கீழ்க்காணும் கடிதமும், மதனவல்லி அம்மாதினிடம் கொடுத்த கொடுத்த நோட்டுகளும் அனுப்பப்பட்டதைப் பெற்ருள். அக்கடிதத்தின் விஷயம் பின்வருமாறு;—

"நான் உன் மாளிகையைவிட்டதும் இதோ ஒரு கடையில் புகுந்து மிக அவசரமாக இக்கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறேன். நீ என்னிடம் ஒரு முக்கிய வேலைக்காகக் கொடுத்த பெருந்தொகையை இதோ இத்துடன் அனுப்பி

விட்டிருக்கிறேன். உன் தோழி என் கணவனை அழைத்துக் கொண்டு வந்தபோது நான் என் மனதை மாற்றிக்கொண்டு விட்டதாகச் சொன்னதையறிந்ததும் நீ என்னை தூஷித்திருப் பாய் என்பதை நானறிவேன். ஆயினும் என்செய்வது? நீ என்னை அறையில்போட்டுப் பூட்டிவிட்டு வெளியில் ஒரு டாயின் அடியில் வைத்துவிட்டுப்போன சாவி தானாக என் னிடம் அறையில் வந்துவிடுமா என்பதை நீ கவனிக்கவேண் டும். ஆதலின் ஏதோ எதிர்பாராத சில சம்பவங்கள் நடை பெற்றிருக்கின்றன என்பதை நீ ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். ஆனால் என் சம்பந்தப்பட்டவரை நடைபெற்றது பெரிய இரகசியமாக இருப்பதால் அதை அறிவிக்கக்கூடா மைக்கு வருந்துகின்றேன். எனினும் நான் வேண்டுமென்று உனக்குத் துரோகம் செய்யவில்லை என்பதை நீ அறிந்து கொள்ளவேண்டுமென்று உன்னை மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மகா பொல்லாதவனாகிய என் கணவன் விஷயத்தில் நீ எவ்வாறு நடந்துகொள்வாயோ எனக்குத் தெரியாது. எப்படி யிருப்பினும் தக்கபடி நடந்துகொண்டு அவன் வலையினின்றும் தப்பித்துக்கொண்டு விடுவதேநலம். எழுதவேண்டிய அவசரத்தில் ஏதோ தப்புகள் நிகழ்ந்திருக்க லாம். ஆதலின் என்னை மன்னிக்கவும்''

இக்கடிதத்தைப் படித்துப்பார்த்த மதனவல்லி, "ஆ! இப்போது எனக்கு முழுசமாசாரமும் தெரிகிறது. மாரப் பன் மனைவி மாரப்பனைவிட அதிகமாக விரும்பும் எவனோ ஒரு காதலன் எப்படியோ நேற்றிரவு அவ்வறையில் புகுந்து விட்டிருக்கிறான். அப்படிப்பட்டவன் யாரோ தெரியவில்லை. கபூர் கிருஷ்ணன் வேலைக்காரியின் அறையில் ஒளிந்திருந்த போது தான் உள்ளே மாரப்பனுடைய மனைவியுடன் எவனோ இருந்திருக்கிறான். ஆதலின் கபூர் கிருஷ்ணன்மீது சந்தேகப்

படுவதில் பயனில்லை. ஆகவே அவ்வறையில் புகுந்தவர் என் கணவனாகவாவது அல்லது இளவரசாகவாவது இருக்க வேண்டும்'' என்றாள்.

அதைக்கேட்ட தோழி, "இல்லையம்மா! இரவு பத்து மணிக்கே செல்லப்பப்பிரபு மாளிகையை விட்டு வெளியே போனவர் விடியற்காலம் மூன்றுமணிக்குமேல்தான் வந்தார்'' என்று கூறினாள். அதற்கு மதனவல்லி, "அப்படியானால் மாரப்பன் மனைவியுடன் நேற்றிரவைக் கழித்த காதலன் இளவரசரே என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் இதற்காக இளவரசிடம் பொறாமைகொள்ளப் போவதில்லை. ஆயினும் கேவலம் அந்த அயோக்கியனான மாரப்பனுக்கு நான் உடன்படும்படி நேரிட்டுவிட்டதே என்பதற்காகத்தான் அதிகம் வருந்துகின்றேன்'' என்று கூறினாள்.

அதைக்கேட்ட தோழி தன் எஜமானியைச் சமாதானப் படுத்த வேண்டுமென்னும் எண்ணத்துடன், "மதனவல்லி; உனக்கென்ன குறை? இதற்காகவெல்லாம் நீ மனங்கலங்கி விடுவதா? உன் அழகையும், சாமர்த்தியத்தையும், அறிவையும் கண்டு எப்படிப்பட்ட மனோ உறுதியுடைய ஆடவர்களும் உன் அடிபணிவார்கள் என்பதில் ஆட்சேபமில்லை. ஆதலின் அதை வைத்துக்கொண்டு நீ அனைவரையும் சரிப்படுத்திக் கொள்ளவேண்டுமே யொழிய இதற்கெல்லாம் அஞ்சலாகாது'' என்றாள். எனினும் அப்போது மதனவல்லிக்குத் துக்கம் அதிகரித்துவிட்டது. வேறொரு பக்கமாகத் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு அழாதகுறையாக நின்றாள். இதைக்கண்ட தோழியும் ஒன்றும் பேசாமல் அந்த அறையில் ஏதோ வேலைசெய்பவள்போல் வேலைகளைக் கவனிக்கலானாள்.

அச்சமயம் மதனவல்லி தன் தோழியைப் பார்த்து, "எனது நம்பிக்கைக்குரிய தோழியே! நீ உடனே இப்பணத்தைக் கொண்டுபோய் கர்னல் மாரப்பனுக்குக் கொடுத்துவிட்டு, அவனிடம் அவன் இன்று விடியற்காலை என்னைவிட்டுப் பிரியும்போது எங்களிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி மற்றும் சில ஆயிரம் பவுன்களை அவன் பரிதிபுரத்துக்குச் சென்றதும் பாங்கில் காணலாமெனச் சொல்லிவிடு. அவன் தங்கியிருக்கும் ஒட்டல் விலாசம் இதோ இருக்கிறது" என்றாள். தோழியும் அப்படியே அதைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வந்தாள்.

மதனவல்லி தன் அறையில் உட்கார்ந்திருந்தபோது ஒரு வேலைக்காரி அவளுக்கென காலை ஆகாரத்தை ஒரு தட்டில் கொண்டுவந்து வைத்துவிட்டுப்போனாள். அப்போதே மதனவல்லியின் கணவனான செல்லப்பப்பிரபுவும் அவ்வறையில் நுழைந்தான்.

121 - வது அத்தியாயம்

செல்லப்பப்பிரபு, தன் மனத்தில் ஏற்பட்ட கவலை முகத்தில் காணப்படாமலிருக்கும்பொருட்டு அவன் அன்றுகாலை எவ்வளவோ அலங்காராதிகளைச் செய்துகொண்டாலும் அவன் முகத்தில் மட்டும் கவலைக்குறி காணப்படாமலிருக்கவில்லை. மதனவல்லி, தன்னுடன் கர்னல் மாரப்பன் முன்னாள் இரவைக்கழித்ததை அவன் அறிந்துகொண்டுவிட்டானோ எனச் சந்தேகப்பட்டு அவன் தன்னைக் கண்டிப்பதற்கே வந்திருப்பானென்றும் நினைத்தாள். ஆனால் அவனுக்கும் அவனுடைய மனைவிக்குமிடையில் அவரவர்கள்

தங்கள் இஷ்டப்படி நடக்கலாமென்னும் ஒப்பந்தம் இருப்பதால் அவனுக்கு அவளை எதைப்பற்றியும் கேட்க எத்தகைய உரிமையு மில்லையாயினும் அவன் மனைவி கேவலம் உலகத்தாரனைவராலும் வெறுக்கப்படும் மாரப்பன்போன்ற ஒருவனிடம் சம்பந்தம்பெற்றாள் என்றால் அவனுக்குச் சிறிதேனும் மனக்கஷ்டம் ஏற்படுமல்லவா? எனினும் மதனவல்லி அத்தகைய சந்தேகத்தையும் அச்சத்தையும் அடக்கிக்கொண்டு தன் கணவனைப் பார்த்து, "நாதா! ஏதோ கஷ்டம் தங்களுக்கு நேர்ந்திருக்கிறது. என்னசங்கதி விவரமாகச் சொல்லும்" என்றாள்.

அப்போது செல்லப்பப்பிரபு சோபாவின்மீது மதனவல்லியின் அருகில் உட்கார்ந்துகொண்டு, "எனதன்புள்ள மதனவல்லி! சில முக்கிய விஷயங்கள் உன்னிடம் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. நான் சொல்லாவிட்டாலும் இன்னும் சொற்பநேரத்தில் உனக்குத் தெரிந்துவிடும். ஆதலின் நானே நேரில் சொல்லிவிடுவது நலமல்லவா?" என்றான். அதைக்கேட்ட அவள், "இவ்வளவு முகவுரையுடன் சொல்லக்கூடிய அவ்வளவு பிரமாதமான விஷயம்தான் என்ன?" என்றாள். அதற்கு அவன், "நான் இப்படிப்பட்ட சங்கடத்தில் மாட்டிக்கொண்டதற்காக நீ என்னைத் தூஷிப்பாயோ என்னமோ தெரியவில்லை. என்னசெய்வது? சொற்ப மோகத்திற்கு ஆசைப்பட்டதற்கு இவ்வளவு கஷ்டப்படநேரிட்டது" என்றான்.

மதனவல்லி:—ஆ! அப்படியானால் நீ எதுவோ தகராறில் அகப்பட்டுக்கொண் டிருக்கிறாய்போ லிருக்கிறது. நீ என்னசெய்துவிட்டாய் என்பதையாவது சொல்.

செல்லப்பப்பிரபு:—நமது ஒப்பந்தம் உனக்கு ஞாபகமிருக்கிறதல்லவா?

மதன:—நேற்று நான் உனக்குப் பணம் கொடுக்கும்போது தான் அதைப்பற்றிப் பிரஸ்தாபித்தாய். இப்போது மறுபடியும் அதைப்பற்றிப் பேசவேண்டிய அவசிய மென்ன?

சேல்:—ஆனால் இப்போது நான் ஒரு தகராறில் அகப்பட்டுக் கொண்டிருப்பதால் மறுபடியும் உன்னிடம் அதைப் பற்றிச் சொல்லவேண்டியதாயிற்று.

மதன:—உண்மையை ஒளிக்காமல் விவரமாகச்சொல். நீ ஒருபெண் விஷயமாக அவஸ்தைப்படுகிறாய்போ லிருக்கிறது, என்று கூறிக்கொண்டே தனது அழகிய கரத்தால் அவனுடைய கன்னங்களில் தட்டினாள்.

சேல்:—அப்படியானால் உனக்கு இதைப்பற்றி ஏதேனும் தெரியுமோ?

மதன:—இல்லை. உன் நடத்தையால் நான் யூகித்தறிந்து கொண்டேன். மேலும் நீ எத்தனை மாதருடனும் சினேகம் செய்யலாம்; அவ்வாறே நான் எத்தனை ஆடவருடனும் சம்பந்தம் வைத்துக்கொள்ளலாம் என்னும் நமது ஒப்பந்தத்தையும் ஞாபகப்படுத்தின யல்லவா?

சேல்:—சரி; எப்படியோ நீ உண்மை விஷயத்தையே அறிந்து கொண்டாய். ஆனால் தகராறு மிகச் சிக்கலானது. எனக்குப் பலவகையான அவமானங்கள் நேரிடுவதுடன் என்மீது வழக்கும் தொடரப்படலாமென நினைக்கிறேன்.

மதன:—இவ்வளவு கஷ்டமா? யார் அது அப்படிப்பட்ட மாது.

சேல்:—குமாரவேல்பிரபுவின் மனைவி ஏகநாயகிச்சீமாட்டி.

மதனவல்லி "ஏகநாயகிச் சீமாட்டியா?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள். ஏனெனின் அப்போதே அவள் மனதில் குமாரவேல்பிரபு தன்னுடன் சம்பந்தம் பெற்றதால் தன் கணவனுன செல்லப்பப்பிரபு அவனுடைய மனைவியான ஏகநாயகியிடம் சம்பந்தம் பெற்றதில் குற்றமில்லை என்று கருதினள்.

சேல்:—நீ ஏன் இவ்வளவு ஆச்சர்யத்துடன் கேட்டாய்? ஒருகால் அவள் கற்பிற்சிறந்த காரிகை என்று கருதினய் போலும்!

மதன:—இப்போது விவரமெல்லாம் பேசிக்கொண் டிருக்க வேண்டாம். தற்சமயம் நீ அகப்பட்டுக்கொண்ட விதத்தைமட்டும் சொல்.

தன் மனைவி விரும்பியபடியே செல்லப்பப்பிரபுவும் விவரத்தையெல்லாம் சொன்னன். மதனவல்லியும் மிகக் கவனத்துடன் அதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். கடைசியில் அவள், "குமாரவேல்பிரபு மறுநாள் உன்னிடமிருந்து திருப்தியானவற்றைப் பெறுவதாகச் சொன்னனல்லவா? அவன் இன்னமும் உனக்குச் சொல்லியனுப்பவில்லையே. அவன் சங்கதி ஏதும் இன்று காலையிலிருந்து உனக்குத் தெரியாதல்லவா?" என்றாள்.

சேல்:—இல்லை. அப்படி அவன் கத்தியுத்தத்துக்குச் சொல்லியனுப்பினலும் இங்கே கபூர் கிருஷ்ணன் இருக்கிறன்.

மதன:—அவன் கத்தியுத்தத்துக்கு அழைத்தால் அதற்குப் போய்த்தான் ஆகவேண்டுமோ?

சேல்:—ஐயோ கடவுளே! அப்படியும் நீ என்னைக் கேட்கலாமா? குமாரவேல்பிரபு என்னைவிடப் பலசாலியாயிருந்து அவன் என்னைக் கொன்றுவிடுவான் என்று

முன்னதாகத் தெரிந்தாலும் நான் அதை ஒப்புக் கொண்டே ஆகவேண்டும். இந்தச்சங்கதி உனக்கு எப் படியாயினும் தெரிந்துவிடுமாதலின் நானே நேரில் சொல்லிவிடலாமெனச் சொன்னேனேயன்றி வேறில்லை.

மதன:—நமக்கிடையில் எத்தகைய ஒப்பந்தமிருந்து நாம் எப் படிப்பட்ட வாழ்க்கையை அனுஷ்டித்து வந்தபோதி லும் எனக்கு வாஸ்தவத்திலேயே உன்னிடம் அன்பு அதிகம். ஆகவே நமக்குள் எத்தகைய அபிப்பிராய பேதமிருந்தாலும், நான் நீ மட்டுமல்லாது மற்றும் சில ஆடவர்களுடன் சிநேகம் செய்திருந்தாலும் எனது அன்பிற்குரியவனான உன் உயிருக்கே ஆபத்து வருகிற தெனத் தெரியும்போது அதைப் பொறுத்துக்கொண் டிருக்க என்னால் எப்படிமுடியும்? ஆதலின் இப்போது நீ சொன்னதைக் கேட்கும்போதே என் மனம் கலங்கு கின்றது.

சேல்:—எனதன்புள்ள மதனவல்லி! நீ இவ்வாறெல்லாம் பேசு வதால் என்னைப் பைத்தியக்காரனாக்கிவிடுவாய்போ லிருக்கிறது. நான் ஆதியில் உன்னை அதிகம் நேசித் தேன். பின்னால் நமது வாழ்க்கையில் எப்படி எப் படியோ நிகழ்ந்திருந்தாலும் எனக்கு உன்னிட முள்ள அன்புமட்டும் சிறிதும் குறையவில்லை. சதா சர்வகாலமும் உன் உருவமே என் கண்முன் தோன்றிக் கொண்டிருக்கும். பலவகையான ஆடம்பரங்களுடன் நாம் வாழ்ந்தபோதிலும் இயற்கையாக நமது உள்ளத் தில் இருக்கவேண்டிய பரஸ்பர அன்புசிறிதும் குறைந்து விடவில்லை. நம்மிருவருக்கும் விவாகம் ஆனபோதே நாம் எங்கேனும் கிராமங்களுக்குச் சென்றுவது எளிய வாழ்வு வாழ்ந்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்

திருக்கும். எனினும் இப்போது வாழ்ந்துவரும் வாழ்க்கை நமது தலையில் விழுந்துவிட்ட பிறகு அதைப் பற்றிக் கவலைப்படுவதில் பயனில்லை. வந்ததையெல்லாம் பொறுமையுடன் அனுபவிக்க வேண்டியதுதான்.

மதன:—ஆ! எனதன்புள்ள நாதா! (என்று கூறிக்கொண்டே அவளுடைய அழகிய கரத்தை அவன் கழுத்தில் போட்டுச் சமீபத்தில் இழுத்துக்கொண்டு) எனக்கு மிகவும் துக்கமாய் இருக்கிறது. நாம் இருவருமே ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கமுடியாதபடி அவ்வளவு கேவலமாக நடந்துகொண்டு விட்டோமென்றாலும் இருவருமே அவ்வாறு செய்துவிட்டதால் அதைப் பரஸ்பரம் மன்னித்து இப்போது உண்மையான காதலனுக்கும் காதலிக்குமுள்ள சம்பந்தப்படி நாம் நடந்து கொள்ளவேண்டும். எப்படியிருந்தாலும் நீ கத்தியுத்தத்தை ஏற்றுக்கொள்ளலாகாது.

செல்:—அன்புள்ள மாதே! நான் இந்த யுத்தத்துக்குச் சிறிதும் அஞ்சுகிறவனல்லன். பெரிய சேனையுடன் படையெடுத்துச் செல்லும்படியான அவசியம் நேரிட்டாலும் நான் முன்னணியில்நிற்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் இப்போதுதான் எனக்கு நல்ல யௌவன பருவம் வாய்த்திருப்பதாலும், செல்வமும் செல்வாக்கும் தக்கபடி அமைந்திருப்பதாலும் அதையெல்லாம் விட்டு இவ்வளவு விரைவில் சாக மனம் வரவில்லை. மேலும் வாழ்க்கையில் நல்லதென்றும் கெட்டதென்றும் உண்டு. நான் சந்தர்ப்பத்துக்கேற்ப கெட்ட வாழ்க்கையையே அனுஷ்டிக்கின்றேனென்றாலும், அதற்காக என் நற்குணங்களை யெல்லாம் தியாகம் செய்துவிட்டேனென்றாலும், அதற்குப் பரிகாரமாக இந்த வாழ்க்கையையே

நீண்டகாலமாவது அனுபவித்தால் தானே சௌகரிய மாய் இருக்கும். மேலும் குமாரவேல்பிரபுவும் சுடுவதில் தேர்ந்தவன். அவனுடன் யுத்தம் செய்வதென்றால் சிறிது அச்சமாகவே இருக்கிறது.

மதன்:—ஓ! உன் வார்த்தைகள் எனக்குப் பயங்கரமானவையாகத் தோன்றுகின்றன. என தன்புள்ள நாதா! இந்த பரஸ்பர யுத்தம் நடக்கவேகூடாது. இதைத் தடுக்க வேண்டும்.

சேல்:—நீ வீணுக்கு இப்பேச்சைப் பேசுகிறாயே யொழிய வேறில்லை. பரஸ்பரகௌரவ மிருக்கிறதல்லவா? இதனால் உடனே குமாரவேல்பிரபு பரஸ்பர யுத்தத்துக்கு வரும்படி என்னை அறைகூவி ஆளனுப்புவான். நானும் என் கௌரவம் காப்பாற்றிக்கொள்ளவே அதை ஒப்புக் கொள்ள நேரிடும்.

மதன்:—(ஏதோ தக்க யோசனை தோன்றியவளேபோல்) அவன் உன்னை அவனுடைய மனைவியுடன் இருக்கும்போது பார்த்துவிட்டதால்தானே இந்த யுத்தம் நடக்க வேண்டும்?

சேல்:—ஆம்; அதுதான் ரகசியம்.

மதன்:—நீ முன்பு ஒருமுறை என்னிடமிருந்து உனக்கு வேண்டிய பணத்தை வாங்கிக்கொண்டுபோனபோது நான் ஏதோ அதிக அனுபவமுள்ளவளென்றும், எதற்கும் புதிய வழிகளைக் கண்டுபிடிக்கக்கூடியவள் என்றும் கூறினையல்லவா?

சேல்:—ஆம்; கூறினேன். ஆனால் அதற்கும் இப்போது நடைபெறும் சம்பவங்களுக்கும் என்னசம்பந்தம்? இந்த பரஸ்பரயுத்தத்தை எப்படியும் நிறுத்தமுடியாது. தைரிய

மாக இதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆனால் நான் இதில் ஜயமடைவேனு என்பது சந்தேகம் சந்தேகமே.

மதன:—எப்படியிருந்தாலும் நீ தயவுசெய்து என் சாமர்த்தியத்தில் நம்பிக்கை வை. எப்படியாகிறதோ பார்ப்போம்.

சேல்:—எனதன்புள்ள மதனவல்லி! இவ்விஷயத்தில் நீ ஏதேனும் முயற்சிசெய்வதா யிருந்தாலும் அது மிகக் கடுமையானதா யிருக்கவேண்டும். ஏனெனின் நிலைமை அவ்வளவு நெருக்கடியானதா யிருக்கிறது.

மதன:—அந்த விஷயத்தை என்னிடம் ஒப்படைத்துவிடு. நான் எப்படியாவது செய்துகொள்கிறேன். ஆனால் நான் சொல்கிறபடி நீ ஒரு விஷயத்தில் நடந்துகொள்ள வேண்டும்.

தன் மனைவி இவ்வாறு சொல்லக்கேட்ட செல்லப்பப்பிரபு இவ்வளவு விரைவில் அவள் என்னவழி கண்டுபிடித்திருப்பாளென ஆச்சர்யத்துடன் நினைத்தானென்றாலும் அவள் அறிவிலும், ஆற்றலிலும், அனுபவத்திலும் தேர்ந்தவளாதலால் ஏதேனும் உபாயம் செய்யலாமென நம்பி அதை அறியும்பொருட்டு மிக ஆவலுடன், "முழு விவரத்தையும் சொல்" என்று கேட்டான்.

மதன:—நீ இப்போது கபூர் கிருஷ்ணனிடம்போய் அவனுடனேயே பேசிக்கொண்டிரு. நான் என் தோழியை உன்னிடம் அனுப்பும்போது நீ சிறிதும் தாமதம்செய்யாமல் விரைந்துவந்து என் அறையின் கதவைத்தட்டாமலும் திடீரென்று உள்ளே புகுந்துவிடு. பிறகு நடப்பதைப் பார்ப்போம். இதில் ஒரு வார்த்தையும் தவறாமல் நடந்துகொள்.

அதன் விவரம் பூராவையும் அறிய செல்லப்பப்பிரபு விரும்பினுனென்ருலும்மதனவல்லி அவன்மேலேபேசவொட் டாதபடி தடுத்து உடனே அவ்வறையிலிருந்து வெளியேறும் படி செய்தாள். ஆதலின் அவன் ஒன்றும் கேட்காமல் அவ் வறையைவிட்டுப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

தன் கணவன் அவ்வறையைவிட்டுச் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் மதனவல்லி மணியடித்து தன் அந்தாங் கத் தோழியை வரவழைத்து, "நீ நான் குறிப்பிட்ட இடத் துக்குச் சென்று கர்னல் மாரப்பனிடம் நான் சொன்னதைச் சொல்லிவிட்டு வந்தாயா?" என்று கேட்டாள். அதற்கு அவள், "ஆம்; நான் கர்னல் மாரப்பனைப்பார்த்துப் பணத்தை யும் கொடுத்துவிட்டு நீ சொன்னதையும் சொல்லிவிட்டேன். அவன் உடனே புறப்பட்டு பரிதிபுரம் செல்வதாகக் கூறி ஞன்" என்று விடையளித்தாள்.

அதற்கு மதனவல்லி, "அப்படியாயின் மிக சந்தோ ஷம். நீ இப்போது உடனே குமாரவேல்பிரபுவின் வீட் டுக்கு விரைந்துசென்று அவன் வீட்டில் இல்லாவிட்டாலும் வரும் வரையில் காத்திருந்து, வந்ததும், அவன் என் சிநே கத்தையும் யோசனையையும் உண்மையாகவே மதிப்பதா யிருந்தால் உடனே ஒரு நிமிஷமும் தாமதிக்காமல் என்னை வந்து பார்த்துவிட்டுப் போகும்படி சொல்லவும்" என்ருள். அப்போது அத்தோழி மெதுவாகவும் நிதானமாகவும், "மாதே! நீ ஒரு விஷயத்தைக் கேள்விப்படவில்லையா? நகா மெங்கும் அதேபேச்சாக இருக்கிறது. கர்னல் மாரப்பன் தங்கியிருந்த ஓட்டலில் காவல்காரர்களும், எனக்கு வேண்டிய சில சாமான்களை வாங்கிய கடையில் சிலரும் அதைப்பற்றிப் பேசிக்கொண்டதை நான் கேள்விப்பட்டேன். இப்போது நீ அதை அறிய விரும்புகிருயோ" என்று கேட்டாள்.

அதற்கு மதனவல்லி, "அந்தச் சங்கதிகளெல்லாம் எனக்கு முன்னரே தெரியும். ஆதலின் அதைப்பற்றி யெல்லாம் இப்போது பேசவேண்டாம். உடனே புறப்பட்டுச் சென்று குமாரவேல் பிரபுவிடம்போய் நான் சொன்ன சங்கதிகளைச் சொல். இப்போது நகரில் பரவியுள்ள வதந்திகளெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியுமென்றும், ஆதலின் அவன் பகிரங்கமாக இம்மாளிகைக்கு வரமுடியாதாதலால் உன்னுடனேயே ரகசியமாக வரும்படியும், நீ அவனை அந்தரங்க வாயிலின் வழியே அழைத்துவருவதாகவும் சொல். மேலும் நான் அவனை மிக அவசரமாகப் பார்க்கவேண்டுமென்றும் தெரிவி," என்று கூறினாள்.

அத்தோழியும் தன் எஜமானி கூறியபடி அவசரமாகப் புறப்பட்டு குமாரவேல் மாளிகைக்குச் சென்றாள். அங்கே குமாரவேல்பிரபு தன் வக்கீலுடன் வழக்கு தொடர்வதன் சம்பந்தமாய் ஆலோசித்துக்கொண் டிருந்தான். எனினும் மதனவல்லியின் தோழி வந்திருக்கிறாள் என்பதை அறிந்த அவன் உடனே எழுந்து என்னவென்று விசாரிக்கவந்தான். அத்தோழி தன் எஜமானி சொல்லியனுப்பிய சங்கதிகளைக் கூறியதைக்கேட்டுக் குமாரவேல்பிரபு சிறிதுநேரம் என்ன செய்வதென்று தோன்றாமல் திகைத்தான். எனினும் தோழியோ தன் எஜமானியின் இஷ்டப்படி அவன் நடக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறினாள். குமாரவேலருக்கும் மதனவல்லியுடன் விரோதம் செய்துகொள்ள இஷ்டமில்லை. மேலும் முன்னாள் இரவு நடந்த சங்கதி விஷயமாய் மதனவல்லி என்ன ஏற்பாடு செய்யப்போகிறாள் என்பதையும் அறிய ஆவலுடையவனாய் இருந்தான். ஆகவே அவன் அவளுடன் வருவதாகச் சொல்லிவிட்டுத் தன் வக்கீலையும் பிறகு வரும்படிசொல்லி யனுப்பிவிட்டு அவன் புறப்படத் தயாரானான்.

மதனவல்லியின் தோழியும் அவனை இரகசியமாக யாருக்கும் தெரியாதபடி அந்தப்புர வாயிலின்வழியே மதனவல்லியின் மாளிகைக்குள் அழைத்துச் சென்று அங்கிருந்து அவளுடைய அறையிலும் அழைத்துச் சென்றாள். அங்கே மிக்க அழகுள்ளவளும், ஆற்றல் படைத்தவளுமான மதனவல்லி தன்னைக் கண்டோர் அப்படியே மோகித்து அவள் இன்பத்தை அனுபவிப்பதற்காக உயிரையும் தியாகம்செய்ய முன்வரும்படியான நிலைமையில் தன்னை அலங்கரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்து குமாரவேல்பிரபுவை மிக ஆவலுடன் வரவேற்றாள். மதனவல்லி குமாரவேலரை தான் உட்கார்ந்திருந்த சோபாவின்மீதே உட்கார்ந்துகொள்ளும்படி கூறிவிட்டுத் தன் தோழியை வெளியேபோகும்படி கட்டளையிட்டாள். ஆனால் அவள் வெளியேபோனபோது மதனவல்லி இரகசியமாக அவள் காதில், "என் அறையிலிருந்து மணி சத்தம் கேட்டதும் உடனே சென்று செல்லப்பப்பிரபுவை நான் அவசரமாக அழைத்ததாகச் சொல். ஆதலின் என் மணியைக் கவனித்துக்கொண்டிரு" என்று கட்டளையிட்டாள்.

122 - வது அத்தியாயம்

மதனவல்லியின் கட்டளைப்படி அவள் தோழி குமாரவேல்பிரபுவை அழைத்துச் சென்றிருந்தபோது மதனவல்லி தன் ஆடையைக் களைந்துவிட்டு இராக்காலத்தில் படுக்கையறையில் அணிவது போன்ற மெல்லியதும், பாதி நிர்வாணமானதுமான ஆடைகளை அணிந்துகொண்டு தன் கூந்தலை அவிழ்த்துப் போட்டுவிட்டு ரதிதேவியைப்போல் உட்கார்ந்துகொண்டு குமாரவேலின் வருகையை எதிர் பார்த்துக்

கொண்டிருந்தாள். எனவே குமாரவேல்பிரபு, மதனவல்லி யின் கணவனுகிய செல்லப்பப்பிரபுவின்மீது அதிக கோப முடையவனு யிருந்தும், மற்றும் பல விஷயங்கள் அவன் உள் ளத்தில் உறுத்திக்கொண்டிருந்தும் அவன் மதனவல்லியின் அழகையும், அவள் உட்கார்ந்திருந்த மாதிரியையும் கண்ட குமாரவேல் அவற்றையெல்லாம் மறந்து அவளிடம் மோகம் கொண்டான். மேலும் அவன் ஒருமுறை மதனவல்லியின் அழகை அனுபவித்தவனுதலின் அதை நினைக்கும்போதே அவன் உள்ளத்தில் ஒருவித காமவிகாரம் கொழுந்துவிட் டெரியலாயிற்று.

இப்போது நாம் சில விஷயங்களை ஞாபகப் படுத்திக் கொள்ளவேண்டும். அதாவது கர்னல் மாரப்பனிடம் குமார வேல் மதனவல்லியின் இரகசியத்தைச் சொல்லிவிட்டானென் பதை அவள் மாரப்பனிடமிருந்து அறிந்துகொண்டது முதல் அவளுக்கு இயற்கையாகவே குமாரவேலிடம் ஒருவகை யான வெறுப்பு ஏற்பட்டது. அவன் அவ்வாறே பல இடங் களில் பெருமை பேசிக்கொண்டிருப்பான் என்பதையும் அவள் அறிந்தாள். இப்படி இருந்தும் அவள் அந்த அறை யில் குமாரவேல்பிரபுவைத் தன் சோபாவிலேயே தன் அரு கில் வைத்துக்கொண்டாளென்றால் அதற்குக்காரணம் அவள் செய்து முடிக்கவேண்டிய ஒரு பெரிய காரியமேயொழிய வேறில்லை. ஆதலின் அவள் பழையசங்கதிகளை மறந்துவிட் டவ்ளேபோல் பாவனைகாட்டி அவனிடம் அவ்வாறு நடந்து கொண்டாள்.

அப்போது அவனைப்பார்த்து, "குமாரவேலரே! நீ பரிதி புரத்திலிருந்து இரத்தினபுரிக்கு வந்ததும் என்னைத்தான் முத லில் பார்ப்பாய் என்று நான் நினைத்தேன்" என்றாள். அதற்கு அவன், "என்தன்புள்ள மதனவல்லி! நான் இன்று பிற்பகல்

இங்கு வரலாமென்றே எண்ணி இருந்தேன். இதற்குள் உன் கணவனுடன் எனக்கு இந்த தகாராறு ஏற்பட்டுவிட்டது. அதனால் எனக்கு எவ்வளவோ கஷ்டம், என்னசெய்வது?'' என்று பதில் அளித்தான்.

அப்போது மதனவல்லி தன்னுடைய மெல்லியகரத்தை அவனது கழுத்தில் போட்டு அவனை அருகிலிழுத்து அவன் மீது சாய்ந்தவண்ணம், "நேற்றிரவு நடந்தவிவாதத்தை நன்ருகச்சொல். நாமிருவரும் சண்டைபோடப் போவதில்லையே'' என்றாள். அதைக்கேட்ட குமாரவேல் தன் மனைவியுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டான் என்பதற்காக யாருடன் பரஸ்பரம் யுத்தம் நடத்தப்போகிருனே அவனுடைய மனைவியாகிய மதனவல்லியின் முகத்தில் முத்தமிட்ட வண்ணம், "நீ இவ்வாறு சொன்னதால் எனக்கு எவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறது தெரியுமா?'' என்று கூறினன்.

அதற்கு மதனவல்லி, "நீ என்னைப் புகழவேண்டாம். நேற்று இரவு நடந்த விஷயத்தைச்சொல்'' என்றாள்.

குமாரவேல்பிரபு, "மதனவல்லி! என் மனைவி ஏழெட்டு மாதங்களாகவே ஒழுக்கந்தவறி நடந்துகொண்டு வருகிறாள்'' என்றான்.

மதன:—நீ என்ன உலக அனுபவம் இல்லாதவனா? அவள் எப்படி நடந்துகொண்டால்தான் என்ன?

குமார:—(அவளை ஒரு முத்தமிட்டுவிட்டு) இல்லை, இல்லை. அவள் அவ்வாறு நடந்துகொள்வதை நான் வெறுக்கிறேன்.

மதன:—அப்படியானல் நீ என்னையும் வெறுப்பாயல்லவா? நானும் ஒருவருக்கு மனைவி. நான் உன்னுடன் சம்பந்தம் வைத்துக்கொண் டிருக்கிறேனே.

குமார:—உன்சங்கதி வேறு. இவ்வுலகில் நீ ஒருத்திமட்டும் எப்படியும் நடந்துகொள்ளலாம். இப்போது அதை யெல்லாம் நாம் ஏன் பேசவேண்டும். இதனால் உனக்குச் சம்மதமில்லாதவற்றையும் நான் கூறநேரிடும். எது எப்படியிருப்பினும் உன்னைத் துன்புறுத்த நான் எப்போதும் சம்மதிக்கமாட்டேன்.

மதன:—நீ என்னை அவமானப்படுத்தமாட்டாய் என்பதை நான் அறிவேன். ஆயினும் நான் மற்றப் பெண்களை விட ஒரு மாதிரியானவளே என்பதிலும் ஆட்சேபமில்லை. என்னை யாரும் அவமானப்படுத்தமாட்டார்கள்.

குமார:—அது உண்மைதான். பரிதிபுரத்தில் நான் ஒரு மனிதனைச் சந்தித்தேன். அவன் என் மனைவி ஏக நாயகியின் அயோக்கியத்தனத்தைப்பற்றி யெல்லாம் விவரமாகச் சொல்லிவிட்டான். அவள் இவ்வளவு கெட்டுப்போனதற்குக் காரணம் அவளுடைய தோழியாகிய ஜகதாளே. அந்த ஜகதாள் சாமர்த்தியம் மிக விசித்திரமானது.

மதன:—உனக்கு இந்த விஷயங்களையெல்லாம் கூறிவிட்ட அந்த மனிதன்தான் யார்.

குமார:—எனதன்புள்ள மதனவல்லி! நான் அதை உன்னிடம் சொல்லமுடியாது, என்று கூறிக்கொண்டே அவள் கன்னத்தில் தட்டிக்கொடுத்தான்.

மதன:—அப்படியானால் நீயாக எவ்வளவுதூரம் சொல்கிறாயோ அதைமட்டும் கேட்கிறேன். நானாக அதிகம் கேள்விகள் கேட்பதில்லை. நீ பரிதிபுரத்தில் கேட்ட சமாசாரங்களை யெல்லாம் இரத்தினபுரிக்கு வந்ததும் ஆராய்ச்சிசெய்து பார்ப்பதாகத் தெரிகிறது.

குமார:—ஆம், அப்படித்தான் செய்கிறேன். அதனால்தான் இரத்தினபுரிக்கு வந்ததும் இங்குவந்து உன்னைக் காண முடியவில்லை. உண்மையிலேயே நான் நேற்றிரவு ஏழு மணிக்கே இந்நகரம் வந்துசேர்ந்தேன். ஆனால் இன்று மாலைதான் வீட்டுக்கு வரமுடியுமென்று என் மனைவிக்குக் கடிதம் அனுப்பினேன். அக்கடிதம் கிடைத்ததும் உன் இனத்தைச்சேர்ந்த பெண்பாலாகிய என் மனைவி உடனே தன் காதலனுக்குச் சொல்லியனுப்புவாள் என்பதை நான் அறிந்தேன்.

மதன:—என்ன சாமர்த்தியமாக யோசனைசெய்கிறாய். என் இனமாகிய பெண்பாலைப்பற்றி எத்தகைய அபிப்பிராயம் கொண்டிருக்கிறாய்! ஆனாலும் பாதகமில்லை, உன் விவரத்தைச் சொல்.

குமார:—சரியாகப் பதினொருமணிக்கு வீட்டுக்குப்போனேன். அங்கே ஏகநாயகியைக் கண்டிருந்தால் ஏதோ அவசரமாக ஒருநாள் முன்னதாக வர நேரிட்டதென்று சமாதானம் கூறிவிட்டிருப்பேன். ஆனால் அவள் அங்கு இருக்கவில்லை. விசாரித்ததில் அவள் உலகாம்பாளென்னும் உலகநாயகிச் சீமாட்டியின் வீட்டுக்குச் சென்றிருப்பதாக அறிந்தேன். உடனே சரியானவழி அகப்பட்டதென நினைத்து அங்கு ஓடினேன். பிறகு நடந்த சமாசாரங்களெல்லாம் உனக்குத் தெரிந்திருக்குமே.

மதன:—ஆம்; இப்போது நீ பெரிய முட்டாளென்பதை உணரவில்லையா? உன் மனைவியிடம் நீ எப்படிக்குற்றம் கண்டுபிடிக்க முடியும்.

குமார:—எனதன்புள்ள மதனவல்லி! நீ சமாதானம் கூறும்படி வற்புறுத்தினால் சொல்லத் தயாராயிருக்கிறேன்

நான் செய்வதெல்லாம் தவருகவும் அயோக்கியத்தன மாகவும் இருக்கலாம். ஆனால் நான் செய்கிறபடியே என் மனைவியும் செய்வதென்றால் அதைப் பொறுத்துக் கொண்டிருக்க என்னால் முடியாது.

மதன:—சரி; இனி நாம் அதைப்பற்றிப் பேசவேண்டாம். ஆனால் நீ செல்லப்பப்பிரபுவைப் பரஸ்பர கத்தியுத்தத் துக்கு அறைகூவி அழைக்கப்போகிறயோ?

குமார:—ஆம்; நான் அவ்வாறு அறைகூவித்தானே ஆக வேண்டும். ஆயினும் உனக்கு உன் கணவனிடம் அபி மான மிருக்குமாதலால் உனக்காக அவனைக் குறிபார்த் துச் சுடாமல் குறிதவறிவிடும்படி செய்வேன்.

மதன:—அது முடியாது; சில சமயங்களில் தவருன குறி களும் சரியாகப்போய்ப் பட்டுவிடுகின்றது. அதனல் அபாயங்களும் ஏற்படுகின்றன.

குமார:—நான் அவனை அறைகூவித்தானே ஆகவேண்டும். நம் நகரில் வழங்கிவரும் கட்டுப்பாடான கொள்கைகள் உனக்குத் தெரியாதா?

மதன:—கௌரவமா! இந்தப் பதத்திற்குச்சரியான பொருளே இல்லையென்று தெரிகிறது. நீ செல்லப்பப்பிரபுவின் மனைவியுடன் சம்பந்தம் வைத்துக்கொண் டிருக்கும் போது உன் மனைவியுடன் அவர் சம்பந்தம் வைத்துக் கொள்வதில் குற்றமென்ன இருக்கிறது? அவரும் உன் மனைவியும் ஒன்ருக இருந்ததை நீ பார்த்துவிட்டதா லேயே அவரை யுத்தத்துக்கு அழைக்கவேண்டுமா?

குமார:—உண்மையாகவே உன் கணவன் என்னையும் உன்னை யும் ஒன்ருகப் பார்த்துவிட்டால் அத்தகைய யுத்தத் துக்குச் செல்லவேண்டிய அவசியம் எனக்கு ஏற் படாதோ?

மதன:—இப்படிப்பட்ட கௌரவம் காப்பாற்றும் கொள்கை மிக ஆபாசமானது. இதோ இங்கே ஒரு புஸ்தகம் இருக்கிறது. அதில் இத்தகைய யுத்தத்தின் ஆபாசங்க ளெல்லாம் விளக்கப்பட்டிருக்கிறது; என்று கூறிக் கொண்டே அவள் ஏதோ புஸ்தகத்தைத் தேடுபவள் போல் பாசாங்கு செய்துகொண்டு அங்கு ஒரு ஓரத்தில் இருந்த மணியின் கயிற்றை இழுத்தாள். இதைக் குமாரவேல் அறியவில்லை. பிறகு அவள், "இப்போது எனக்கு அப்புஸ்தகம் அகப்படவில்லை. எனினும் நீ செய்வது தப்பு அல்லவா?" என்று கூறிக்கொண்டே அவன்மீது சாய்ந்து பல சரசசல்லாபங்களைச் செய்து அவன் உணர்ச்சியைக் கிளப்பிவிட்டாள். ஆகவே இரு வரும் பரஸ்பரம் முத்தமிட்டுக்கொண்டும் ஆலிங்கனம் செய்துகொண்டு மிருக்கும்போது அவள், அவன் காதில் ரகசியமாக,"இப்போது குமாரவேல்பிரபு அவன் மனைவியாகிய ஏகநாயகியையும், அவள் காரணமாக ஏற்பட்ட கோபத்தையும், இதர விவகாரங்களையும் மறந்துபோய்த் தான் காதலிக்கும் மாதின் இன்பத்தை அனுபவிக்கக் காத்திருக்கிறான்" என்று கூறினாள்.

உண்மையிலேயே அவன் எல்லாவகைச் சரசசல்லாபங் களையும் அனுபவித்துவிட்டு அவள் இன்பத்தைப்பெற முயற் சிக்கும்போது திடீரென்று செல்லப்பப்பிரபு கதவைத் திறந்து கொண்டு உள்ளேவந்தான். அவனைக் கண்டதும் குமார வேல்பிரபு, மதனவல்லி ஒரு பெரிய விஷப்பாம்பாக இருந் தால் அதை எப்படி எறிவானோ அப்படி எறிந்துவிட்டுத் திகைப்புடன் தூரநின்று செல்லப்பப்பிரபுவின் முகத்தை நோக்கினான். அவன் கண்களில் தீப்பொறி பறந்துகொண் டிருந்தது. ஆகவே அவன் மிகக் கோபத்துடன் இருக்

கிருன் என்பதை உணர்ந்தான். செல்லப்பப்பிரபுவுக்கோ இதைக்கண்டதும் ஆத்திரமும் கோபமும் உதித்ததென்ருலும், மதனவல்லி வேண்டுமென்றே ஏதோ தந்திரம் செய்திருக்கிருளென்பதை அறிந்து நிதானபுத்தியுடன் அவ்வறையின் கதவை உள்பக்கம் தாளிட்டுக்கொண்டு அவர்களிருவரும் உட்கார்ந்திருக்கும் சோபாவை நோக்கிச்சென்ருன்.

முதலில் சிறிதுநேரம் குமாரவேல்பிரபுவுக்கு ஒன்றும் தோன்ருமல் திகைப்பு ஏற்பட்டது. எனினும் சொற்பநேரத்துக்கெல்லாம் மதனவல்லி, ஆவென்று சிரித்துக்கொண்டு குமாரவேலின் தற்கால நிலைமையை ஞாபகமூட்டினுள். அப்போதுதான் அவனுக்கு உண்மைநிலை புலனுயிற்று. செல்லப்பப்பிரபுவையும், குமாரவேலையும் ஒரேவிதமான நிலைமையில் வைக்க மதனவல்லியே இத்தகைய சூழ்ச்சி செய்திருக்கிருள் என்று உணர்ந்தான். உடனே குமாரவேல் மதனவல்லியின் செயலைக்கண்டு சிறிது ஆத்திரமுமடைந்தான். எனினும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு செல்லப்பப்பிரபுவைப் பார்த்து, "உன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இப்படிப் பட்ட சாமர்த்தியமுள்ள மனைவியை மணந்துகொண்டது உன் அதிர்ஷ்டமே. அவள் உன்னைக் காப்பாற்றுவதற்காகத் தன்னைத்தானே தியாகம் செய்துகொள்கிருள். இப்போது நான் உனக்கு யுத்தத்துக்கு வரும்படி அறைகூவி அழைக்கவும் முடியாமல் போய்விடுகிறது" என்ருன்.

அதற்குச் செல்லப்பப்பிரபு, "நான் வியபிசாரம் செய்வோனுக இருப்பதால் என் மனைவியை இப்போது கண்டிப்பதற்கு நான் முடியாமல் இருக்கிறேன்" என்ருன். அப்போது குமாரவேல்பிரபு மிக வெறுப்புடன், "நாம் இங்கே இவ்வாறு பேசிக்கொண்டு நிற்கவேண்டியதில்லை. இப்போது நாம் பரஸ்பரம் ஒருவரையொருவர் பரஸ்பர யுத்தத்துக்கு

அறைகூவி அழைக்கமுடியாத நிலைமையில் இருக்கின்றோம். இவ்வாறே பரஸ்பரம் வழக்குத் தொடாமுடியாதவர்களாக வும் இருக்கிறோம்'' என்றான்.

அதற்குச் செல்லப்பப்பிரபு, "நாம் வழக்குத் தொடர்ந் தால் அது இதுவரை எந்தக்கோர்ட் முன்னும் கொண்டுவரப் படாத விசித்திர வழக்காகவே இருக்கும். ஆனால் இந்தச் சிக்கலான பிரச்சினையைத் தீர்ப்பதெப்படி?'' என்று கேட் டான். அதற்குக் குமாரவேல்பிரபு, "அழகிலும் ஆற்றலிலும் சிறந்த தெய்விகப் பெண்ணாகிய நமது மதனவல்லி இதற்கு ஏதேனும் உபாயம் சொல்லக்கூடும். அவளால் செய்யக்கூடா தது ஒன்றுமில்லை. இந்தச் சிக்கல் அவளால்தான் பரிகரிக் கப்படவேண்டும்'' என்று கூறினான்.

இதுவரையில் அவர்களிருவரும் பேசுவதை மௌன மாகக் கேட்டுக்கொண்டிருந்த மதனவல்லி, தன் அபிப்பிரா யத்தைச் சொல்ல அதுவே சமயமெனக்கருதி, "நீங்களிரு வரும் இன்று எதிர்பாராத நிலைமையில் விசித்திரமான சந் தர்ப்பத்தில் நிற்கிறீர்கள். இதிலிருந்தும் எப்படித் தப்புவ தென்பதை நீங்கள் இருவரும் அறிந்துகொள்ளவில்லை என்றே தெரிகிறது; இப்போது செல்லப்பப்பிரபு ஏகநாய கிச் சீமாட்டியுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிறார் என்பதுமட்டும் நகரெங்கும் தெரிந்துவிட்டது. குமாரவேல் பிரபு செல்லப்பப்பிரபுவின் மனைவியுடன் சம்பந்தம் வைத் திருப்பதை இப்போது செல்லப்பப்பிரபு பார்த்துவிட்டா ரென்றாலும் செல்லப்பப்பிரபு இதை வெளியிடவோ, தன் மனைவியை விலக்கிவிடவோ இஷ்டப்படவில்லை. ஆனால் குமாரவேலர் தன் மனைவியை விலக்கிவிட இஷ்டப்படுகிறார். மேலும் அவர் மனைவியின் சங்கதி மட்டும்தான் ஊரெங்கும் பரவிவிட்டபடியால் அவர் செல்லப்பப்பிரபுவை யுத்தத்துக்கு

அழைக்காவிட்டால் அவரது நண்பர்களும் மற்றவர்களும் அவரைப் பரிகாசம் செய்வார்கள். ஆனால் யுத்தத்தில் அவர் செல்லப்பப்பிரபுவை எத்தகைய துன்பம்செய்யவும் சம்மதிக்க மாட்டார். ஏனெனின் தன்னெஞ்சு தனக்குத்தெரியுமல்லவா? ஆதலின் இப்போது நீங்கள் என்னசெய்ய வேண்டுமென்றால் வெறும் போலியுத்தத்தை நடத்தி ஒருவருக்கும் எத்தகைய ஆபத்தும் வாராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். ஆனால் மேற்பார்வைக்கோ இருவரும் மிக ஆத்திரத்துடனும் கோபத்துடனும் சண்டை போடுவதுபோலவே காண்பிக்கவேண்டும்'' என்று விவரமாகக் கூறினாள்.

அதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த குமாரவேல்பிரபு, "அப்படிப்பட்ட விஷயம் நடந்தால் உண்மையிலேயே இப்பிரச்சினை எளிதாக முடிந்துவிடும். உலகத்துக்கும் சமாதானமாய்விடும். பார்க்கிறவர்களும் நம்மை மதிப்பார்கள். நமக்குள்ளும் பரஸ்பரம் அக்கிரமம் நடக்காமல் நீதி நிகழ்ந்துவிடும்'' என்று கூறினான். அதற்குச் செல்லப்பப்பிரபுவும், "நானும் இதை முற்றிலும் ஒப்புக்கொள்கிறேன். இப்போது நான் உன்னால் கொல்லப்பட விரும்பவில்லை. அதுபோலவே நானும் உன்னைக்கொல்ல விரும்பவில்லை'' என்றான்.

அதற்குக் குமாரவேல்பிரபு, "ஆனால் என் மனைவியை விவாகரத்து செய்து விலக்கிவிடுவதற்காக அதற்குமுன் தொடரவேண்டிய வழக்கைத் தொடர ஏற்பாடு செய்துவிட்டேன். அதற்காக வக்கீல்களுடன் கலந்து பேசவேண்டியதையும் பேசியிருக்கிறேன்'' என்றான். அதைக்கேட்ட மதனவல்லி, "நீ பரிதிபுரத்திலிருந்து திரும்பிவந்ததுமுதல் ஒரு நிமிஷமும் சும்மா இராமல் இதேவேலையாய் இருக்கிறாய் போலும். அதற்கும் ஒன்று சொல்லுகிறேன். பெயரள

வுக்கு மட்டும் நஷ்ட ஈடுகோரலாகாதோ?" என்றாள். அதைக் குமாரவேல் ஒப்புக்கொண்டு மானநஷ்ட ஈடுவழக்கு சம்பந்தப் பட்ட வரையில் அவ்வாறு செய்துவிடலாம். ஆனால் நீ சொன்னபடி போலியுத்தம் நடத்துவதெப்படி?" என்று கேட்டான். அதற்கும் தக்கபடி ஒரு உபாயத்தை அறிவிற் சிறந்த மதனவல்லி கூறிவிட்டாள். ஆதலின் இருவரும் சமாதானம் செய்துகொண்டுவிட்டார்கள்.

அப்போது மதனவல்லி, "செல்லப்பப்பிரபுவே! இப் போது நீர் போகலாம். நான் என் தோழியை வரவழைத்து அவளுடன் குமாரவேலரை யாரும்பார்க்காதபடி இரகசியமாக அனுப்பிவிடுகிறேன்" என்றாள். அப்போது செல்லப்பப் பிரபு குமாரவேலரைப் பார்த்து, "அப்படியானால் இன்று பகலில் நீ உன் ஆளை அனுப்பி என்னை யுத்தத்துக்கு வரும் படி அறைகூவி அழைப்பாய்போலும்" என்றான். அதற்குக் குமாரவேலும், "ஆம்; அப்படித்தான் அனுப்புவேன்" என் றான். அப்போது மதனவல்லி மணி அடிக்கவே செல்லப் பப்பிரபு வெளியே போய்விட்டார்.

அவர் போய்விட்டதால் அவ்வறையில் குமாரவேல்பிரபு வும், மதனவல்லியும் மட்டும் தனியே இருந்ததால் மதன வல்லி, "குமாரவேலரே! நான் இவ்வாறு நடந்துகொண்டதற் காக என்மீது கோபிக்கவேண்டாம். ஏனெனின் உங்கள் யுத்தத்தை நிறுத்தி என் கணவனின் உயிரைக் காக்கவேண்டு மென்று கருதியதால் இவ்வாறு செய்தேன். ஆதலின் கோப மில்லையென்று என்னிடம்சொல். நான் உன்னுடன் சண்டை போடத் தயாராயில்லை" உன்று கூறிக்கொண்டே அவன் மீது சாய்ந்து அவன் சந்தோஷப்படும்படி சரசசல்லாபங்களைச் செய்தாள்.

அதனால் சந்தோஷமடைந்த குமாரவேல்பிரபு, "நல்லது, எனதன்புள்ள மதனவல்லி! ஆனால் நீ நடந்துகொண்ட வகையால் நான் சிறிது ஆத்திரமடையக் காரணமிருக்கிறதென்பதை நீ உணரவேண்டும்" என்றான். அதற்கு அவள், "சீ; இப்போது அதைப்பற்றியெல்லாம் பேசவேண்டாம். சாவகாசமாக உட்கார்ந்து பரிதிபுரத்தில் நடந்த விஷயங்களை விவரமாகச்சொல்" என்றாள்.

அப்போது அவ்வறையின் கதவு தட்டப்பட்டது. அவ்வாறு தட்டுவது தன் தோழிதான் என்பதை அறிந்த மதனவல்லி, அவள் இன்னும் அரைமணிநேரம் பொறுத்து வரலாமென்றும், தன் கணவன் எதிரில் உடனே குமாரவேலை அனுப்பிவிடுவதுபோல் ஜாடைகாட்டவே மணியடிக்க நேர்ந்ததென்றும், ஆனால் அவள் இன்னும் சொற்பநேரம் குமாரவேலருடன் பேசவேண்டியிருக்கிறதென்றும் சொல்லி அனுப்பிவிட்டாள்.

பிறகு குமாரவேல்பிரபு பரிதிபுரத்தில் நடந்த விவரத்தில் எவைகளை மட்டும் மதனவல்லியிடம் சொல்லலாமென்று அவன் கருதினானோ அவைகளை மட்டும் விவரமாகச்சொன்னான். கர்னல் மாரப்பனைப்பற்றி அவனும் பிரஸ்தாபிக்கவில்லை. அவளும் வற்புறுத்திக் கேட்கவில்லை. உண்மையில் இளவரசி சம்பந்தப்பட்ட வரையில் அங்கு என்ன நடந்திருக்கிறதென்பதை அறிய அவள் விரும்பினளே யொழிய மற்ற விவரங்களை அறியவேண்டுமென்னும் ஆவல் அவளுக்கிருக்கவில்லை. அவளுடைய ரகசியங்கள் பலவற்றை அறிந்துகொண்டிருக்கும் குமாரவேலிடம் சினேகமாய் இருக்கவேண்டுமென்பதற்காகவே அவள் அவ்வளவுதூரம் அவனிடம் விட்டுக்கொடுத்துப் பேசினாள்.

தன் எஜமானி சொல்லியபடி அரைமணிநேரம் முடிந்த பின்னர் மதனவல்லியின் தோழி அவ்வறைக்கு வந்து குமாரவேலை ரகசியமாக அழைத்துச் சென்று மாளிகைக்கு வெளியில் யாரும் அறியாதபடி விட்டுவிட்டாள். அப்போது மதனவல்லி தன் அறையில் தனியாகத் தங்கியிருந்தாளாதலின் பற்பலவிதமான எண்ணங்கள் அவள் மனத்தில் உதிக்கலாயின. அவள் ஒழுக்கமென்பதே சிறிதும் அற்றவளாய்த் தன் அழகையும், சாமர்த்தியத்தையும் தனக்குப் புகழும் இன்பமும் அதிகமாய்க் கிடைப்பதற்கு எத்தகைய வழிகளாலெல்லாம் உபயோகித்துக்கொள்ளலாமோ அவ்வளவையும் உபயோகித்துக்கொண்டாள்.

123 - வது அத்தியாயம்

நாம் மேலேகூறியபடி நடந்துகொண்டிருந்த அதே சமயத்தில் அந்த இரத்தினபுரியின் மற்றொரு புறத்தில் இதேவிதமான ருசிகரமான சம்பவம் நடந்துகொண்டிருந்தது. அதை நாம் இப்போது கவனிப்போம். வட்டிக்குப் பணத்தைக் கொடுப்பதையே தனது தொழிலாகக் கொண்டுள்ள வேலப்பன் தனது பிரத்யேக அறையில் உட்கார்ந்துகொண்டு அன்று காலை தபாலில் தனக்குக் கிடைத்த கடிதங்களையெல்லாம் கூர்மையாகக் கவனித்துவந்தான். அக்கடிதங்களைப் பார்த்துக்கொண் டிருக்கும்போது சிற்சில சமயங்களில் ஏதோ கோபமடைகிறவன்போல் உதட்டைக் கடிப்பான்; சில சமயங்களில் புருவம் நெற்றிக்குமேல் போகும்படி அச்சக்குறி காட்டுவான்; சில சமயங்களில் தான் உட்கார்ந்திருந்த கம்பளத்தின்மீது கையால் தட்டி ஆத்திரத்தைக் காண்பிப்பான். இவ்வாறாக அவன் கடிதங்

களைப் பார்த்துக்கொண் டிருந்தான். உண்மையிலேயே அவன் பலவிதமான கவலைகளை அடைந்திருந்தான். அவன் ஏகநாயகிச் சீமாட்டியின் சம்பந்தத்தை வைத்துக்கொண்டது முதல் தன் ஆயுளிலேயே அதுவரையில் செய்தறியாத வகையில் பணத்தைத் தாராளமாகச் செலவுசெய்ய ஆரம்பித்து அதனால் தன் மூலதனத்திலேயே பெரும்பகுதியைச் செலவழித்துவிட்டிருந்தான். இதை அவனது மனைவியும் மகளும்கூட அறிந்துகொணடுவிட்டார்கள். எனினும் அதைப் பற்றிக்கேட்க அவர்களுக்குத் தைரியமில்லை. மேலும் அவன் அந்நகர முனிசிபல் சபையில் ஒரு மெம்பராக அபேட்சகராக நின்று தோல்வி யடைந்திருந்தான். முதலில் அவனுடைய நண்பர்கள் அவனை அத்தேர்தலில் நிற்கும்படி யோசனை கூறியபோது அதற்குச் செலவாகும் தொகையைச் செலவிட அஞ்சினான். எனினும் பலர் அவனை ஆதரிப்பதாகச் சொன்னதைநம்பி நின்று பெரும் தொகையையும் செலவழித்தான். ஆனால் இறுதியில் தேர்தல் தினத்தன்று பலர் போலிங் ஸ்டேஷனுக்கு வரவேயில்லை. வந்த பலரும் அவனுக்கு விரோதமாக வாக்களித்துவிட்டார்கள். இது தேர்தல் காலங்களில் நடைபெறும் சம்பவங்களே என்பது இக்காலத்தில் பலருக்கும் தெரிந்தவிஷயம். ஆகவே பாவம்! அவன் செலவு செய்தானே யொழிய பலன் காணவில்லை. அவன் தோல்வி யடைந்துவிட்டதால் அவனுக்கு அந்நகரிலிருந்த சிறிது செல்வாக்கும் அடியோடு அழிந்தது. அவனிடம் கொடுக்கல் வாங்கல் செய்துகொண்டிருந்த பலர் அதை நிறுத்திக் கொண்டுவிட்டார்கள். இதனால் அவனுக்குச் சமயத்துக்கு ஆயிரம், ஐந்நூறு கொடுத்தவர்களெல்லாம் கொடுக்க மறுத்து விட்டார்கள். அவன் தன் மனைவிக்கும் தன் காதலியான ஏகநாயகிக்கும் நகைகளும் ஆடைகளும் மற்ற சாமான்களும் வாங்கிய இடத்திலிருந்து பணத்துக்கு அவசரம் ஏற்பட்டுவிட்

டது. ஆகவே அவன் அக்கடிதங்களைப் பார்த்துக்கொண் டிருந்தபோது அவ்வாறு கவலைப்பட்டதில் ஆச்சர்யமொன்று மில்லை.

மேலும் அன்று அவனுக்கு மற்றொரு சங்கதியும் எட்டி யிருந்தது. அதாவது ஏகநாயகிச் சீமாட்டியும், செல்லப்ப் பிரபுவும் கௌரியின் வீட்டில் ஒன்றாக இருந்ததைக் குமார வேல்பிரபு பார்த்துவிட்டான் என்பதே. அதனால் அவனுக் குண்டான ஆத்திரமும் ஏமாற்றமும் பொறாமையும் இவ் வளவு அவ்வளவென்று சொல்லமுடியாது. தன்னைத்தவிர வேறு கள்ளக்காதலன் அவளுக்கு யாருமில்லை என ஏக நாயகி வேலப்பனிடம்சொல்லி அவனை ஏமாற்றி எவ்வளவோ பெருந்தொகையை அபகரித்திருந்தாள். அதனாலும் அவ னுக்கு அவள்மீது ஆத்திரம் உண்டாயிற்று. தன் அழிவுக் குக் காரணமான அந்தப் பாதகியை நம்பி அவளுக்காகப் பெருந்தொகையைத் தான் புத்தியில்லாமல் செலவழித்ததற் காக மனமார நொந்துகொண்டான். இத்தகைய சங்கட மான நிலைமையில் இன்னது செய்வதென்று தோன்றாமல் முதலில் இன்சால்வென்சி மனுச்செய்துகொண்டு பாபராகிப் போய் பிறகு ஏதேனும் உபாயமாகத் தொழில் நடத்தலாமா என்று யோசித்தான். பிறகு எவ்வளவுதூரம் தனக்குச் சேரவேண்டிய பணத்தை வசூலிக்கமுடியுமோ அவ்வளவை யும் வசூலித்துக்கொண்டு வேறுநாட்டுக்கு ஓடிப்போய் வேறு பெயரால் ஏதேனும் தொழில் செய்யலாமா என்று ஆலோ சித்தான். தன் மனைவியும் மகளும் மிதமிஞ்சிய செலவு செய்து அவனைக் கடன்காரனாக்கிவிட்டதால் அவர்களைச் சிறிதும் இரக்கமின்றித் தவிக்கவிட்டுவிட்டு ஓடிப்போவ தென்று முடிவுசெய்தான். ஆ! என்ன அயோக்கியன் பார்த் தீர்களா! தான் மணந்துகொண்ட மனைவியையும் பெற்ற

மகளையும் தனியே வருந்த விட்டுவிட்டுத் தான் மட்டும் தப்பிப்பிழைக்க முயன்ற சுயநலம் வாய்ந்த அவன் மிகக் கொடியனன்றோ? "ஆனமுதலி லதிகஞ்செலவானல் மான மழிந்து மதிகெட்டு" என்று பெரியோர் பாடியிருக்கும் பாடலைப்போல் மிதமிஞ்சி செலவு செய்கிறவர்கள் என்றைக்காயினும் ஒருநாள் இவ்வாறு அழிந்துபடுவர் என்பது நிச்சயம். மேலும் நல்ல விஷயத்தில் செலவழிக்கப்படாத செல்வம், கூத்திக்கும் குடிக்கும், வீணுக்கும் வம்புக்கும் அழியுமென்று பெரியோர்கள் கூறியிருப்பதேபோல் சாப்பிட்ட கையாலும் காக்கையை ஒட்ட மனம்வராத,வட்டித்தொழிலில் ஒன்றுக்கு இரண்டாகச் சம்பாதித்த அயோக்கியனுன வேலப்பனின் கதி எவ்வாருயிற்றென்பது மிதமிஞ்சிச் செலவு செய்வோருக்கும், கஷ்டப்பட்டுத்தேடிய பணத்தை நல்வழியில் செலவு செய்யாதவர்களுக்கும் தக்கதோர் படிப்பினையாகும்.

தனக்குச் சேரவேண்டிய தொகையையெல்லாம் தானே வசூல்செய்ய முடியாமலும் இருக்கின்றது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவன் யாரேனும் ஒருவரைநம்பி தன் விஷயங்களை வெளியிட்டுத்தான் ஆகவேண்டியிருந்தது. ஆகவே அவன் தன் பழைய குமாஸ்தாவாகிய விசுவநாதனையே நம்ப வேண்டியதாயிற்று. எனினும் அவன் தன்மீது ஏதேனும் சந்தேகப்படுவானே என்னும் அச்சம் அதிகரித்தது. இறுதியில் அந்த விசுவநாதன் நம்பிக்கைக் கேற்றவிதமாக நடந்துகொண்டிருப்பதாயும், அவன் தன்னைக் காட்டிகொடுக்க மாட்டானென்றும், எனினும் எவ்வளவுதூரம் கட்டாயம் சொல்ல வேண்டுமோ அவ்வளவு மாத்திரம் சொல்வதென்றும் முடிவு செய்தான். இவ்வாறு தைரியம் செய்துகொண்டு முகத்தில் எத்தகைய் கவலைக்குறியும் தெரியாமலிருக்கும்பொருட்டு முகத்தை நன்ருகக் கழுவிக்கொண்டு ஒரு டம்ளர் இனிய

மதுபானம் அருந்திவிட்டு விசுவநாதனைத் தான் இருக்கும் இடத்துக்கு வரும்படி சொல்லியனுப்பினன். விசுவநாதன் அவ்வறையில் நுழையும்போது சிறிதும் கள்ளங் கபடமற்ற முகஜாடையுடையவனாயும், மிக்க மேதை மரியாதையுடனும் நுழைந்ததால் வேலப்பனும் தான் விசுவநாதனைப்பற்றி நினைத்ததெல்லாம் சரியே என்று கருதினன். எனவே அவனை தன் எதிரிலிருந்த நாற்காலியின்மீது உட்காரச் சொல்லி விட்டு, "விசுவநாதா! இவ்வறையின் கதவைச்சாத்து. நான் உன்னிடம் சில அந்தரங்க விஷயங்களைப் பேசவேண்டும்" என்றான்.

விசுவநாதனும் தன் எஜமானன் சொன்னபடியே செய் தான். அவன் தனக்கென நியமிக்கப்பட்ட நாற்காலியில் உட்காரச் செல்லும்போது, "ஐயா, சிறிது நேரத்துக்கு முன்புதான் யாரோ சிலர் இங்கு தங்களைத் தேடிக்கொண்டு வந்திருந்தார்கள். தாங்கள் கடிதங்களைப் பார்த்துக்கொண் டிருந்ததால் அப்போது தாங்கள் இங்கில்லை எனத் தெரி வித்துவிட்டேன்" என்றான். அதற்கு வேலப்பன், "ஆ! அப்படியானல் அப்போது வந்தவர்கள் என்னல் விரும்பப் படாதவர்கள் என்று உனக்குத் தெரியும்போலும்" என்று கூறிக்கொண்டே அவன் முகத்தில் எத்தகையகுறி காணப் படுகிறதென்பதை யறிய அவனை நோக்கினன்.

அதற்கு விசுவநாதன், "ஆம்; நான் உண்மையாகவே அப்படித்தான் நினைத்தேன் ஐயா; அவர்கள் தாங்கள் கொதுவை வைத்த சாமான்களை மீட்டுச்செல்ல வந்தார்கள். தங்களுக்கு வரவேண்டிய பெரும்பாக்கி இப்போது கிடைக் காமலிருப்பதாலும், தங்களிடம் அவ்வளவு பெருந்தொகை இராதென நான் நினைத்ததாலும், நானே சரியான பதில் சொல்லி அனுப்பிவிடுவது நலமெனக்கருதி அவ்வாறு சொல்லி

யனுப்பிவிட்டேன்'' என்றான். அதைக்கேட்ட வேலப்பன், "விசுவநாதா! நீ சரியான காரியத்தையே செய்திருப்பதுடன் உண்மையில் உள்ள விஷயத்தையே உணர்ந்துகொண்டாய், நீ என்னிடம் நீண்டகாலமாக உத்தியோகத்துக்கு இருப்ப தால் வியாபார உலகத்தை நன்கு அறிந்திருப்பாய் என்றே நம்புகிறேன். சிற்சில சமயங்களில் எப்படிப்பட்ட செல்வர் களும், பெரிய வியாபாரிகளும் பணமுடையால் கஷ்டப்படு வது சகஜமல்லவா? நான் வெளியில் கொடுத்திருக்கும் பணம் அவசரத்துக்கு வராமையால் இப்போது கஷ்டப்படவேண்டி யதாக இருக்கிறது'' என்று கூறினான்.

அதற்கு விசுவநாதன், "ஆம்; நான் இந்த சந்தர்ப்பங் களையெல்லாம் நன்கு அறிவேன். எனினும் தங்களைப் போன்ற சாமர்த்தியமும் பெரிய வியாபாரசக்தியும் உடை யவர்கள் மிகக் கடுமையான நெருக்கடியில் அகப்படமாட்டீர் என்பதை நான் அறிவேன்'' என்றான். அதைக்கேட்ட வேலப்பன், "இல்லை, இல்லை. அப்படி நினைக்கக்கூடாது. நாம் இப்போது என்னசெய்ய வேண்டுமென்றால் நமக்கு யார் யார் பணம் வசூலாகவேண்டுமோ அதை உடனே வசூல் செய்யவேண்டும். அவர்கள் பணம் தருகிறவரையில் நமது அவசரச்செலவுக்குப் பணம் நான் பாங்கிகளிலிருந்து கடன் வாங்கிக்கொள்கிறேன்,'' என்றான்.

அப்போது விசுவநாதன், "ஐயா; தங்களுக்கு யார் யார் எவ்வளவு சேரவேண்டுமென்பதை என்னிடம் சொல் லுங்கள், நான் அதைக்குறித்து வைத்துக்கொண்டு நான் அவர்களிடம் சென்று வசூலிக்க ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறினான். அதற்கு வேலப்பன் தான் முன்னமே அவ்வாறு குறித்து வைத்திருந்த கடிதத்தை அவனிடம் கொடுத்தான்.

விசுவநாதன் சந்தோஷத்துடன் தான் நினைத்தபடி பழியைத் தீர்த்துக்கொள்ளச் சமயம் வாய்த்துவிட்டதென்றும், இப்போது நெருக்கடி ஏற்பட்டிருக்கும் சமயத்தில் கடன்காரர்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கவேண்டுமென்றும் நினைத்துக்கொண்டே அவ்விடத்தை விட்டகன்றான். வேலப்பனும் அந்த அறையைவிட்டுச் சென்றானென்றாலும் அவன் தான் விசுவநாதனிடம் சொன்னபடி பெருந்தொகை கடன்வாங்கப் போகவில்லை. எனினும் ஒருகாலத்தில் அவனுடன் பெரிய தொகையைக் கொடுக்கல், வாங்கல் செய்துகொண்டிருந்த பணக்காரர்களிடம் அவன் சென்றானாயினும் அவர்கள் தங்கள் பணத்தை அவனிடம் கொடுக்க விரும்பவில்லை. ஆதலின் அவன் ஒன்றுமில்லாமல் வெறுங்கையுடன் திரும்பினான்.

வேலப்பன் திரும்பி ஆபீசுக்கு வந்தபோது வெளியில் பணம் வசூல்செய்யச் சென்றிருந்த விசுவநாதனும் திரும்பி வந்திருந்தான். அவன் சாதாரணமாக வழக்கப்படி தன் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தான். ஆனால் அவன் அரைமணி நேரத்துக்கு முன்பே அங்குவந்து தனியாக இருந்ததால் அச்சமயத்தில் அவன் வேலப்பனின் பெட்டியைத்திறந்து குமாரவேலிடம் கொண்டுவந்து கொடுப்பதாகச் சொல்லி இருந்த கடிதத்தை எடுத்துத் தன் உட்சட்டைப் பையில் வைத்துக்கொண்டுவிட்டான். வேலப்பன் உள்ளே நுழைந்ததும் தன் குமாஸ்தாவைப் பார்த்து, "என்ன சமாசாரம்? வசூல் செய்யப்போன இடத்தில் எப்படி" என்று மிக ஆவலுடன் கேட்டான். அதற்கு விசுவநாதன் "நான் சென்ற பல இடங்களிலும் பாக்கியை விரைவில் கொடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இதோ முந்நூற்றைம்பது பவுன்கள் வசூலித்துக்கொண்டு வந்திருக்கிறேன்'' என்றான்.

186554

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 4-பாகம் விலை ரூபா 8-4-0

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஆு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" "சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம், 4-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி ரகசியம் 5-ம்பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9 10 0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0 2 0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1 12 0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1 4 0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3 4 0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2 0 0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1 12 0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2 0 0

மானேஜர்:—"ஆனந்த நிலயம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.